1962-63-ம்

ஆண்டு நிதி நிலை அறிக்கை

நிதி அமைச்சர்

திரு எம். பக்தவத்சலம்

அவர்களின் உரை

30—6—1962

1962-63-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை

1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி, தமிழ் நாடு சட்ட சபையில் நிதி அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்களின் உரை.

சபாநாயகர் அவர்களே,

1962-63-ம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையை நான் இப்போது சமர்ப்பிக்கிறேன். நடப்பு ஆண்டுக்கான இடைக்கால '' பட்ஜட் '' சென்ற டிசம்பரில் பழைய சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்கம் செய்ய வேண்டிய செலவுக்காக மானிய அனுமதி பெறப்பட்டது கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் தெரியும். வரவு-செலவுப் போக்கில் இப்போது கிடைத்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் இடைக்கால பட்ஜட் திருத்தி யமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய '' பட்ஜட் '' இந்த அரசாங்கத்தின் கொள்கைகளையும் புதிய வேலைத் திட்டங்களையும் பிரதிபலிக்கிறது. முன்னுரை.

2. இடைக்கால வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களையும் புதிய வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், வருவாய் ரூ 92·71 கோடியிலிருந்து ரூ 106·50 கோடியாக உயர்ந்திருப்பதும், செலவு ரூ 99·67 கோடியிலிருந்து ரூ 116·01 கோடியாக உயர்ந்திருப்பதும் தெரியவரும். இப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் எந்த முடிவுக்கும் வருவதற்குமுன், ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்திய அரசினர் கணக்குகளை வகைப்படுத்தும் முறையில் சில சீர்திருத்தங்களைச் செய்துள்ளனர். இவற்றின் அடிப்படையில் இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. கணக்குத் தலைப்புகளில் முக்கியமான சில மாற்றங்கள் செய்திருப்பது ஒருபுறமிருக்க, தற்போதைய கணக்கு முறையின்படி வாணிபத் துறைகள் செலுத்தும் வட்டித் தொகை வரவாகக் காட்டப்படுகிறது. இதுவரையில் இது செலவுக் குறைப்பாகக் காட்டப்பட்டு வந்தது.

இவ்வண்ணமே, பாசன, வாணிபத் துறைகளின் நடைமுறைச் செலவுகள் செலவுப் பக்கத்தில் இப்போது காட்டப்படு கின்றன. இவை இதுவரையில் வரவுக் குறைப்பாகக் காட்டப்பட்டு வந்தன. இப் புது முறை வருவாயையும் செலவையும் மிகைப்படுத்திக் காண்பிக்கின்றது. எனவே, தற்போதைய வருவாயையும் செலவையும் இடைக்கால பட்ஜட்டுடன் ஒப்பிட்டு மதிப்பிடுகையில், இப் புதுக் கணக்கு முறையினுல் வரவு, செலவு இரண்டு பகுதிகளிலும் ரூபாய் எட்டு கோடி அளவிற்குப் பெயரளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பைத் தள்ளிவிட்டுப் பார்க்க வேண்டும். இப்படிப் பார்த்தாலும், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது எதிர்பார்த்த வரவு-செலவுகளை விட இப்போது வரவுகளும் செலவுகளும் அதிகரித்தே உள்ளன. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படுவது காரணமாக நமது பொருளாதார அமைப்பில் செயல்படும் சக்திகளே இந்த அதிகரிப்புக்குக் காரணமாகும். பொது விற்பனை வரி, மத்திய விற்பனை வரி, மோட்டார் எண்ணெய் வரி, மோட்டார் வண்டி வரி போன்ற தலைப்புகளின்கீழ் வரவு அதிகரித்துள்ளது. மூன்ருவது திட்டம் காரணமாகப் பொருளாதார நடவடிக்கைகள் பெருகி வருவதே பெரும் பாலும் இந்த அதிகரிப்பிற்குக் காரணம். செலவு அதி கரிப்பை எடுத்துக்கொண்டோமாஞல், ஐந்தாண்டுத் திட்டங்களின் காரணமாகவே இது இந்த அளவு அதிகரித் துள்ளது நன்கு புலனுகும். கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம் போன்ற தலைப்புகளின்கீழ் செலவு மிக அதி கரித்துள்ளது. எனவே, இந்த வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களை இம் மாநில மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பின்னணியில் வைத்துப் பார்த்தால்தான் சரியாக மதிப்பிட முடியும். நமது மாநிலத் திட்டம் மகத்தான தேசீயத் திட்டத்தின் ஓர் அம்சம் என்பதையும், இத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளத்தைப் பலப்படுத்தி, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும். எனவே, இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை விரிவாக ஆராய்வதற்கு முன், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாய உற்பத்தி.

3. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் விவசாய உற்பத்தித் துறையில் நாம் எய்திய சாதனைகளைக் கண்டு பெருமைப்பட இடமிருக்கின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் தமிழ் நாட்டில் உணவுத் தானிய உற்பத்தி 38 லட்சம் டன் அளவில் இருந்தது ; முதல்

ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் இந்த உற்பத்தி 44 லட்சம் டன்களாக உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இராசயன உரம் போதிய அளவிற்குக் கிட்டாத சூழ்நிலையிலும் 9 லட்சம் டன் உணவுத் தானியங்கள் அதிகமாக உற்பத்தி செய்ய முடிந்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் உணவுத் தானிய உற்பத்தியை 70 லட்சம் டன் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்பது தான் நமது இலட்சியம். அதாவது, 17 லட்சம் டன் அதிக உணவுத் தானியங்களை இந்தத் திட்டக் காலத்தில் நாம் உற்பத்தி செய்ய வேண்டும். நீர்ப்பாசனம், நில அபிவிருத்தி, உர வினியோகம், பொறுக்குவிதை வினியோகம் போன்ற பல துறைகளிலும் ஒருமித்துச் செயலாற்றுவதன் மூலமாகத்தான் நாம் இந்த இலட்சியத்தை அடைய முடியும்.

இராசயன உரங்கள்.

4. இந்த அளவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெருமளவிற்கு செயற்கை, இயற்கை உரங்களை நாம் நம்பியிருக்கிருேம். ஆகவே, 1961-62-ம் ஆண்டில் அமோனியம் சல்பேட், யூரியா போன்ற நைட்ரஜன் உரங்கள் கிடைப்பது வெகுவாக அபிவிருத்தியடைந்தது என்பதைக் கேட்க கனம் அங்கத்தினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்ட நைட்ரஜன் உரங்கள் 1·10 லட்சம் டன்களிலிருந்து 1·49 லட்சம் டன்களாக உயர்ந்தன. நெய்வேலி உரத் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தால், இந்நிலை மேலும் அபிவிருத்தியடையும். இதுவரையில் உணவுப் பயிர்கள், மற்ற பயிர்கள் என்று தனித்தனியாக நாம் உரங்களைப் பிரித்துக் கொடுக்கவில்லை. நடப்பு ஆண்டிலிருந்து உணவுப் பயிர்களுக்கென்றும், பருத்தி போன்ற மற்ற பயிர்களுக்கென்றும் தனியாகக் குறிப்பிட்ட அளவிற்கு உரங்களை ஒதுக்குவதென்று முடிவு செய்திருக்கிருேம்.

உள்ளூர் உரப் பொருள்கள்

5. செயற்கை உரங்களின் உபயோகம் மேலும் உயருமென்று நாம் எதிர்பார்க்கின்ற அதேநேரத்தில், இயற்கை உரங்களையும் சேர்த்து உபயோகித்தால்தான் அதிக பலன் கிடைக்குமென்பதையும் உணர்ந்திருக்கிருேம். அதனுல்தான் உள்ளூர் எருப் பொருள்களின் (Local manures) உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிருேம். கிராமத்தில் கிடைக்கின்ற எல்லாக் கழிவுப் பொருள்களையும் பயன்படுத்திக் குழிவளம் தயாரிக்கவும், அப்படித் தயாரிப்பதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி கொடுக்கவும் நாம் ஒரு திட்டம் போட்டு நிறைவேற்றி வருகிருேம். இந்தத் திட்டம் மொத்தம் 375 வட்டாரங்களிலே 202 வட்டாரங்களில் அமுலில் இருக்கிறது. இந்த

ஆண்டில் மேலும் 52 வட்டாரங்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும். கடந்த ஆண்டில் கிராமக்குழிவள (Rural Compost) உற்பத்தி 12·75 லட்சம் டன்கள் அதிகரித்தது என்பதை அறிந்து கனம் அங்கத்தினர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

பொறுக்கு விதை.

6. இதேபோன்று பொறுக்குவிதை வினியோகத்திலும் நாம் தொடர்ந்து முன்னேறியிருக்கிறோம். அரசாங்க விதைப் பண்ணைகளில் மூல விதைகளை உற்பத்தி செய்வது, பிறகு பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன் கிராம அளவில் அவற்றைப் பெருக்கி விவசாயிகளுக்கு வழங்குவது—இதுதான் நமது திட்டம். 1961-62-ம் ஆண்டு இறுதியில் நம் மாநிலத்தில் 136 அரசாங்க விதைப் பண்ணைகள் இருந்தன. பல இன்னல்களுக்கிடையில் நாம் துவக்கிய இந்த விதைப் பண்ணைகள் பெரும்பாலும் ஆரம்பகால இடர்களை யெல்லாம் சமாளித்துவிட்டன என்று கூறிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். விதைப் பண்ணைகளின் குறிக்கோள் இலாபம் சம்பாதிப்பது அல்ல. இருப்பினும், அரசாங்க விதைப் பண்ணைகளில் 87 பண்ணைகள் கடந்த ஆண்டில் இலாபகரமாகப் பணியாற்றியிருக்கின்றன என்பதைக் காணும் போது இப் பண்ணைகளின் எதிர்காலத்தில் நமக்கு நல்ல நம்பிக்கை ஏற்படுகிறது. பொறுக்கு விதைகளை பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கின்ற "கிராம சகாயக்கு"களின் மூலம் பெருக்கி, வினியோகம் செய்வது என்ற முறை கடந்த ஆண்டில் முதல், இரண்டாவது கட்ட பஞ்சாயத்து யூனியன்களில் அமுல் நடத்தப்பட்டது; நடப்பு ஆண்டில் இந்த முறை எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் விஸ்தரிக்கப்படும். சென்ற ஆண்டில் நாம் 2,500 டன்களுக்கு மேல் அதிகமாக பொறுக்கு விதைகளை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறோம். இதற்குக் காரணம் புதிதாகத் தோன்றியுள்ள நம்முடைய கிராமப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் விவசாய உற்பத்திப் பெருக்கில் காட்டிய அக்கறைதான் என்றால் அது மிகையாகாது. ஆனால், பொறுக்கு விதை வினியோகத்தில் நாம் தீர்வு காண வேண்டிய பிரச்சினை இன்னும் ஒன்று இருக்கிறது. கிராமத்தில் உற்பத்தியாகின்ற பொறுக்கு விதையைப் பாதுகாத்து வைத்து, விவசாயிகளுக்கு விதைப்புக் காலத்தில் வழங்குவதற்கு நாம் முயல வேண்டும். இதற்குப் பண்டகசாலை, கடன்வசதிகள் தேவை. ஆகவே, இந்தத் திட்டத்தைச் செயலாற்றுவதில் நாம் கூட்டுறவுச் சங்கங்களையும் இணைக்க வேண்டும். இதைப்பற்றி அரசாங்கம் இப்பொழுது பரிசீலனைசெய்து கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்களுடைய யோசனைகளையும் நான் வரவேற்கிறேன்.

7. விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ருல், நம் விவசாயிகள் புதிய கருவிகளையும் இன்னும் பரவலாக உபயோகிக்க வேண்டும். இதை மனத்திற் கொண்டு, சென்ற ஆண்டில் விவசாயிகளுக்குப் புதிய கருவிகளை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை நாம் மேற்கொண்டோம். சென்ற ஆண்டில் மிகவும் தாமதித்துத்தான் இந்தத் திட்டம் துவங்கிய போதிலும், ஆண்டு முடிவிற்குள் 22,875 புதிய கலப்பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில், ஒரு லட்சத்து நாற்பதாயிரம் கருவிகளை வழங்குவதாக உத்தேசித் திருக்கிருேம். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

8. உணவு உற்பத்திப் பெருக்கம் நம்முடைய ஜீவாதார மான பிரச்சினை யென்ருலும், பருத்தி, எண்ணெய் வித்துக் கள் போன்ற வியாபாரப் பயிர்களுடைய உற்பத்திப் பெருக் கிலும் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும். நடப்பு ஆண்டில் பருத்தி பற்ருக்குறையை, முக்கியமாக நெட்டிழைப் பருத்தி பற்ருக்குறையை, போக்குவதற்காக பருத்தி விஸ் தரிப்புத் திட்டம் (Cotton Extension Scheme) பருத்தி விதைப் பெருக்கத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் சேர்த்து இணைவான பருத்தி அபிவிருத்தித் திட்டம் (Integrated Cotton Development Scheme) அமுலாக்கப்படும். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் நெல் சாகுபடிக்குப் பிறகு தரிசு நிலங்களில் பருத்தி பயிர் செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். வியாபாரப் பயிர்கள்.

9. நம்முடைய மாநிலத்தின் பல பகுதிகளில் நிலக்கடலை முக்கிய பயிராக இருக்கிறது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பொதுத் திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சமாக நடப்பு ஆண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி ஆகிய இடங்களில் ஒரு தீவிர திட்டம் (Package Scheme) அமுல் நடத்தப் படும். இதன்மூலம் நிலக்கடலை உற்பத்தியை நாற்பது சத விகிதம் பெருக்கத் திட்டமிட்டிருக்கிருேம்.

10. நம்முடைய விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நெடுநோக்குடன் நாம் நம்முடைய கிராமப் பொருளாதாரத்தில் புதிய பயிர்களின் உற்பத்தி யையும் ஓரளவிற்குப் புகுத்த வேண்டும். நம்முடைய மாநிலத்தின் சில பகுதிகளில் கோக்கோ பயிர் செய்வதற்கான

வாய்ப்புக்கள் உள்ளன என்று தோன்றியதால் கிரியலோ (Criollo) என்ற ரக கோக்கோ பயிர் உற்பத்திக்கான ஒரு பரீட்சார்த்த திட்டத்தை கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் அமுலாக்குவதென்று முடிவு செய்து அதற்கென திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம். இத் திட்டம் வெற்றி பெற்றால், நாளடைவில் நம்முடைய உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் போதுமான அளவு கோக் கோவை உற்பத்தி செய்ய முடியும்.

விவசாய ஆராய்ச்சி.

11. விவசாய உற்பத்திக்கான நீண்டகாலத் திட்டங்களை நாம் உருவாக்க வேண்டுமென்றால், தீவிர ஆராய்ச்சி தேவை. ஆராய்ச்சி வேலைக்கு ஊக்கம் கொடுக்கின்ற முறையில் ஆடுதுறை, திண்டிவனம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் இயங்குகின்ற ஆராய்ச்சி நிலையங்களை பெருநிலை பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களின் தரத்திற்கு உயர்த்தியிருக்கிறோம். இந்நிலையங்கள் அந்தந்த பிராந்தியங்களில் விளையும் எல்லா முக்கிய பயிர்களுடைய பிரச்சினைகளைப்பற்றியும் ஆராய்ச்சி நடத்தி, முடிவுகள் காணும். 1961–62 ம் ஆண்டில் திருநெல் வேலி, ராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் நவீன விஞ்ஞான விவசாய முறைகளில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற் காக ஆறு விவசாயப் பள்ளிகளை ஆரம்பித்தது கனம் அங்கத் தினர்களுக்கு தெரிந்திருக்கலாம். இந்தப் பள்ளிகள் திருப்திகரமாக நடக்கின்றன; தொடர்ந்து செயல்படும். இந்த ஆண்டில் இதர மாவட்டங்களில் மேலும் 6 பள்ளிகளைத் திறக்க உத்தேசித்துள்ளோம். மலை வாழையைப் பற்றிய பயிர் முறை, உரமிடுதல், நடவு போன்ற பல பிரச்சினைகளின் நுணுக்கங்களையும் ஆராய்ந்து விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குவதற்காக ஓர் ஆராய்ச்சி நிலையத்தை மதுரை மாவட்டத்தில் கீழ் பழனியில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறோம். இதற்கான நிலங்களைக் கூடிய சீக்கிரம் தேர்ந்தெடுத்து, ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கு வோம் என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

12. விவசாயிகள் தங்களுடைய நிலங்களுக்குச் சீரிய முறை யில் உரமிட வேண்டுமென்றால், நிலங்களின் மண்வளத்தை ஆராய்ந்து அதற்கேற்ப உரமிடுவதைப் பற்றி ஆலோசனை கூற வேண்டும். இந் நோக்கத்துடன்தான் 1960-61-ம் ஆண்டில் கோவை, ஆடுதுறை ஆகிய இரண்டு இடங்களில் மண்வள ஆய்வுக் கூடங்களை (Soil Testing Laboratories) நிறுவினோம். இந்த இரண்டு கூடங்களிலும் வேலை நெருக்கடி

அதிகமாயிருப்பதால் இன்னும் இரண்டு ஆய்வுக்கூடங்களை கடலூரிலும், கோவில்பட்டியிலும் அமைப்பதென முடிவு செய்திருக்கிறோம். இதேபோன்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தின் (Package Scheme) கீழ் ஒரு விதைப் பரிசோதனை நிலையத்தையும் அமைக்கப் போகிறோம். இங்ஙனம் விவசாயத்தின் பல துறைகளிலும் ஆராய்ச்சியைப் பெருக்கி, நவீன விஞ்ஞான அறிவைப் பயன் படுத்துவதன் மூலம்தான் பல நூற்றாண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்ற நம்முடைய விவசாயத்தை வளமாக்கி, விவசாயி களின் நல்வாழ்விற்கு அடிகோல முடியும்.

13. தரிசு நிலங்களைப் பண்படுத்தி, உற்பத்திக்கு லாயக் காகச் செய்வதற்கு விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாகவே புல்டோசர் போன்ற சாதனங்களை இன்னும் பெருமளவில் விவசாய இலாகா ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கோரி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்த நீண்ட காலக் கோரிக்கையை ஓரளவு பூர்த்தி செய்யுமளவில் கடந்த ஆண்டில் ரஷ்யாவிலிருந்து 7 புல்டோசர்களையும், அமெரிக் காவிலிருந்து 8 புல்டோசர்களையும் பெற்றிருக்கின்றோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டில் மேலும் 14 புல்டோசர்களைத் தருவிப்பதற்கு ஏற்கனவே உத்திரவு கொடுத்து விட்டோம்.

14. விவசாய உற்பத்தியைக் குறுகிய காலத்தில் பெருக்கு வதில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கின்ற அதே நேரத்தில், மண்வளப் பாதுகாப்பு போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளை நாம் மறந்து விடவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பிற்காக 250 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம். 1961-62-ம் ஆண்டில் சமவெளிப் பிரதேசங் களில் 71,052 ஏக்கர்களிலும், மலைப் பிராந்தியத்தில் 3,595 ஏக்கர்களிலும் இத் திட்டத்தை நிறைவேற்றினோம். நடப்பு ஆண்டில் சமவெளிகளில் 75,000 ஏக்கர்களும், மலைப் பிராந்தி யத்தில் 2,000 ஏக்கர்களும் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படும்.

மண்வளப் பாதுகாப்பு.

15. மண்வளப் பாதுகாப்பும், அத்துடன் இணைந்த சீரிய விவசாய முறைகளும் இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்றால், பஞ்சாயத்துக்களையும், பஞ்சாயத்து யூனியன்களையும் இத் திட்டத்தில் அக்கறை காட்டும்படிச் செய்து திட்டங்களையும் அவர்கள் மூலமாகவே நிறைவேற்ற முயல வேண்டும். இக் குறிக்கோளுடன்தான் சென்ற தமிழ்ப் புத்தாண்டு தினத்திலிருந்து கோவை மாவட்டத்தில் 3 வட்டாரங்களிலும், சேலம் மாவட்டத்தில் 3 வட்டாரங்

களிலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்று கின்ற பெரும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்திருக்கின்றோம். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 7,500 ஏக்கர்களில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கான செலவில் முக்கால் பங்கை அரசாங்கம் மான்யமாக வழங்கும் ; மீதி கால் பங்குத் தொகை விவசாயிகளுக்கு ஐந்தாண்டுத் தவணையில் கடனாக வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் மண் அரிப்பு தடுக்கப்படுவதுடன் கிராமங்களில் வேலையில்லாத பருவங்களில் ஏழைகளுக்கு வேலைவாய்ப்புக்களும் கிடைக்கும். அரசாங்கத்திற்கு இதுவரை கிடைத்த தகவலிலிருந்து இந்தப் பரீட்சார்த்த திட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த வட்டாரங்களைச் சார்ந்த கனம் அங்கத்தினர்கள் இந்தத் திட்டம் மேலும் சீரிய முறையில் செயல்படுவதற்கான அரிய யோசனைகளை அவ்வப்பொழுது வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பாசன வசதிகள் ; பெரிய நடுதரத் திட்டங்கள்.

16. நம்முடைய பாசனத் திட்டங்கள் வழக்கம்போல் தீவிரமாக முன்னேறி வருகின்றன. பாசன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது என்ற குறை இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் எழக் காரணம் இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2.92 லட்சம் ஏக்கர்களுக்குப் புதிதாகப் பாசன வசதி செய்து கொடுத்ததில் 2.62 லட்சம் ஏக்கர்கள் ஏற்கனவே சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன. நம்முடைய மாநிலத்திலே இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் பாசனத் திட்டங்களில் மிகவும் பெரிய திட்டமான பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் கணிசமான அளவிற்கு வேலை நடைபெற்றிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்படவிருக்கும் அணைத் தொடர்களில் முதல் நீர்த் தேக்கமான ஆளியாறு அணை பூர்த்தியாகி அக்டோபர் மாதத்திற்குள் பொள்ளாச்சி தாலுக்காவில் 10,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியுமென நம்புகிறேன். நீர்த்தேக்க வேலைகளுடன்கூடவே இணைந்து வாய்க்கால் வேலையும் நடைபெறுவதால் பாசன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் காலதாமதம் எதுவுமிராது. இந்தத் திட்டத்திற்காக நடப்பு ஆண்டில் 4,53 லட்சம் ரூபாய் பட்ஜட்டில் ஒதுக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர்கள் வரவேற்பார்கள். இதைத் தவிர, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்

ஏழு நடுத்தரப் பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றுவது என அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த ஏழு திட்டங்களின் பெயர்களும் அவற்றிற்கான செலவுகளின் மதிப்பீடும் கீழ்வருமாறு :—

திட்டத்தின் பெயர்.	செலவு மதிப்பீடு. ரூபாய் லட்சத்தில்.
1. பாலாற்று அணைக்கட்டையும் கால்வாய்களையும் சீர் செய்தல்	48.10
2. சாத்தனூர் திட்டம் இரண்டாம் நிலை ..	55.00
3. சித்தார் பட்டணம்கால்	2,72.00
4. வைகைக் கால்வாய்கள் சீரமைப்பு ..	2,63.00
5. கோமுகி நதித் திட்டம்	87.00
6. மஞ்சளாறுத் திட்டம்	65.80
7. மணிமுக்தா நதி	88.00

இவைகளைத் தவிர, 18 லட்சம் ரூபாய் மதிப்பீடுள்ள ராம நதித் திட்டத்தையும், 89 லட்சம் ரூபாய் மதிப்பீடுள்ள கடானு நீர்த் தேக்கத் திட்டத்தையும் மூன்றுவது ஐந் தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு திட்டக் கமிஷனின் அனுமதியைக் கோரியிருக்கிறோம்.

சிறு பாசனத் திட்டங்கள்.

17. நடப்பு ஆண்டில் சிறிய பாசனத் திட்டங்களுக்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. புதிய கிணறுகளை வெட்டுவதற்கான மானியத் திட்டத்தை இப்போது மாநிலம் முழுவதற்கும் விஸ்தரித்து இருக்கின்றோம். இத் திட்டத்திற்காக 74 லட்சம் ரூபாய் பட்ஜட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தரைமட்டப் பாசன வசதிகளுக்கு வாய்ப்பில்லாத இடங்களில், ஊற்று நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஊற்று நீர்க் குழாய்க் கிணறுகளையும் (Artesian wells), துணை ஊற்று நீர்க் குழாய்க் கிணறுகளையும் (Sub-artesian wells) தோண்டுவதற்கான வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து அமுலாக்கி வருகிறோம். இதற்கென 94 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு தோறும் 500 ஊற்று நீர்க் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கு வழிவகை செய்வதாக முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு கிணற்றிற்கும் ரூ 6,000 கடனாகத் தரப்படும். கடனில் ரூ 500-க்கு மேற்படாமல் 10 சத விகிதம் மான்யமாக வழங்கப்படும். வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (Filter-point wells) வெட்டுவதற்காகத் தொடர்ந்து ஒவ்வொரு கிணற்றுக்கும் ரூ 3,000-க்கு மேற்படாமல் கடன் தரப்படும். இந்த ஆண்டில் 400 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். அரசாங்கச் செலவிலேயே குழாய்க் கிணறுகளை (Tube wells)

வெட்டி, அவற்றைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் விவசாயிகளிடமிருந்து தண்ணீர்த் தீர்வை வசூல் செய்வதற்கான ஒரு திட்டத்தையும் நாம் வகுத்திருக்கிறோம். மூன்றுவது திட்டக் காலத்தில் அங்ஙனம் 150 கிணறுகளை உருவாக்குவதற்குத் தீர்மானித்திருக்கிறோம்.

18. பாசன ஏரிகளையும் வாய்க்கால்களையும் சீரமைப்பதற்கான விசேஷ சிறிய பாசனத் திட்டம் ஊக்கத்துடனும் திறமையுடனும் நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காக இவ்வாண்டில் ரூபாய் 1,71 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இம் மாநிலத்தில் ஆற்று நீர்த்தேக்கத் திட்டங்களின் கீழ் பெரும் பாசன வசதிகளை விஸ்தரிப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம் இல்லை. எனவே, சிறு பாசனத் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆவன செய்வோம் என்று உறுதி கூறுகின்றேன். அரசாங்கத்தின் இத்தகைய நேரடிப் பாசனத் திட்டங்களைத் தவிர, விவசாயிகள் தங்களுடைய கிணறுகளுக்குப் பம்ப் செட்டுகளை அமைப்பது தொடர்ந்து முன்னேறிக் கொண்டு வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் நம்முடைய மாநிலத்தில் மின்சார வசதி பெற்ற பம்ப் செட்டுகள் 14,626 தான். இன்று 140,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கிறதென்றால், கடந்த பத்தாண்டுகளில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என்பதை ஓரளவு உணர முடியும். விவசாய உற்பத்திக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் நாம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கிறோம்.

கால்நடை அபிவிருத்தி.

19. கிராமப் பொருளாதாரத்திற்கு கால்நடைச் செல்வம் மிகவும் முக்கியமானது. எனவே, கால்நடை வளர்ச்சிக்கான பல திட்டங்களுக்கும் நாம் போதிய கவனம் செலுத்தி வந்திருக்கின்றோம். உதகமண்டலத்திலிருந்த நகராண்மைக் கழகப் பால் பண்ணையை கடந்த ஆண்டு அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, ஜர்சி இனப் பசுக்களை வளர்க்கின்ற பண்ணையாக அபிவிருத்தி செய்வதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதற்கென நடப்பு ஆண்டில் 2·55 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கின்றோம். இப்பொழுது ஓசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, உதகமண்டலம், ஒரத்தநாடு ஆகிய ஐந்து இடங்களிலும் கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. நடப்பு ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புதிய கால்நடைப் பண்ணை ஆரம்பிக்கப்படும். கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகளைப் பெருக்குவதிலும் அக்கறை காட்டி, ஒரு வட்டாரத்திற்கு ஒரு கால்நடை மருத்துவ நிலையம் என்ற இலட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு செல்கிறோம். 1961-62-ம் ஆண்டில்

25 கால்நடை மருத்துவ நிலையங்களை நிறுவுவதற்கு அங்கீகாரம் தந்தோம். நடப்பு ஆண்டில் 30 மருத்துவ நிலையங்களைத் திறக்க வழிவகை செய்திருக்கிறோம். நம்முடைய கால்நடை வளர்ச்சித் திட்டங்களில் எல்லாம் மிகவும் முக்கியமானது கேந்திரக் கிராமத் திட்டம். விஞ்ஞான முறையில் இனப் பெருக்கம் செய்தல், கன்றுகளைப் பராமரித்தல், தீவனங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற கால்நடை அபிவிருத்தியின் பல்வேறு அம்சங்களும் இந்தத் திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. இந்தத் திட்டம் நடப்பு ஆண்டில் ஆறு கேந்திரக் கிராம வட்டாரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக நம்முடைய மக்களுக்கு சீரான நல்ல உணவு கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் கோழி வளர்ப்புத் திட்டத்திலும் அதிக கவனம் செலுத்தினோம். 1961-62-ல் ஐந்து கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் மேலும் நான்கு விஸ்தரிப்பு நிலையங்களைத் துவக்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

20. நம்முடைய மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 17 சத விகிதம்தான் காட்டுப் பிரதேசமாக இருக்கிறது. 33 சத விகிதமாவது வனப் பிரதேசமாக இருக்க வேண்டுமென்பது தேசீய இலட்சியம். எனவே, நம்முடைய காட்டு வளத்தை வளர்க்கும் நோக்கத்துடன் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 4 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் காடுகளை வளர்க்க முடியுமென எதிர்பார்க்கிறோம். நம்முடைய மக்களின் விறகுப் பிரச்சினையைத் தீர்ப்பதும், வளர்ந்து வருகின்ற தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை உற்பத்தி செய்வதும் வன வளர்ச்சிக்கான திட்டங்களின் முக்கிய குறிக்கோள்களாகும். கடந்த சில காலமாகவே சென்னை நகரில் விறகுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சென்னை நகரை அடுத்துள்ள காடுகளில் விரைவில் வளரும் விறகு மரங்களை வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென அரசாங்கம் கருதி இருந்தது. இம்மாதிரியான திட்டம் இயற்கையிலேயே ஒரு நீண்டகாலத் திட்டமாகத்தான் உருவாக முடியும். அந்தத் திட்டத்தின் முதற்படியாக நடப்பு ஆண்டில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் காட்டு இலாகா நிலப்பரப்பில் சுமார் 2,000 ஏக்கர்களில் விறகுக்குப் பயன்படும் மரங்கள் நடப்படும். இதற்காக பட்ஜட்டில் 2·83 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். காகிதம், செயற்கைப் பட்டு, தோல் பதனிடுதல் போன்ற தொழில்களுக்கு காட்டில் விளையும் கற்பூர மரம்

காட்டு வளம்.

(Bluegum), வாட்டில் (Wattle) போன்ற மரங்கள் மூலப் பொருள்களாகத் தேவைப்படுகின்றன. எனவே, திட்டக் காலத்தில் இம் மர வகைகளை நீலகிரியிலும், மேல் பழனி யிலும் 20,000 ஏக்கர்களில் வளர்க்க உத்தேசித்துள்ளோம். 1961-62-ம் ஆண்டில் முறையே 3,825 ; 642 ஏக்கர்களில் இம் மரங்களைப் பயிரிட்டிருந்தோம். நடப்பு ஆண்டில் 2·47 லட்சம் ரூபாய் செலவில் மேலும் 4,423 ஏக்கர்களில் இத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்திருக்கிறோம். காகிதத் தொழிலுக்கு மூங்கிலும் ஓர் அவசியமான மூலப் பொருள். எனவே, 1,040 ஏக்கர்களில் மூங்கில் வளர்ப்பதற்கும் திட்ட மிட்டிருக்கிறோம்.

மீன் வளம்.

21. நீண்ட கடற்கரையையும் பல நீர்நிலைகளையும் உடைய நம்முடைய மாநிலத்தில் மீன்வளத்தை வளர்ப்பதற்கும் நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் மீன் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், அந்தத் தொழிலை நவீன, விஞ்ஞான ரீதியில் நடத்த வேண்டும். அப்பொழுது தான் மீனவர்களின் பொருளாதார, சமூக நிலைகளையும் நாம் உயர்த்த முடியும். இந்த ஆண்டில் 70 இயந்திரப் படகுகளைக் கட்டவும், மீனவர்களிடையே 28,000 பவுண்டு நைலான் நூல் விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மீன் பிடிப்புத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கும், மீன்களைக் கரை சேர்க்கும் வசதிகளைப் பெருக்குவதற்கும் நாம் முயன்று வருகின்றோம். இதுவரை கடலூர் துறைமுகத்தில் வேலை துவங்கி கட்டிட வேலை பெருமளவிற்கு நடந்து இருக்கிறது. நாகப்பட்டினத்தில் மீன்பிடிப்புத் துறைமுகத்திற்கான இடத்தை வாங்கி விட்டோம். ராயபுரம் துறைமுகத்திற்கான முன்னோடி வேலைகள் அநேகமாகப் பூர்த்தியாகி வேலைக்கான மதிப்பீடு கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் கொளச்சல், தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களிலும் மீன்பிடிப்புத் துறைமுகங்களை ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக் கைகள் எடுத்துக்கொள்ளப்படும். இம் மாநிலத்தில் மீன் வளத்தைச் சரிவரப் பயன்படுத்த தீவிர தொழில் நுணுக்க, உயிரியல் ஆராய்ச்சிகள் தேவை. தவிர, மீன்வளத்தைப் பற்றி பொதுமக்களும் வெகுவாக உணரும்படிச் செய்ய வேண்டும். இந்த நோக்கங்களுடன்தான் சென்னை நகரில் மொத்தம் ரூபாய் 11 லட்சம் செலவில் ஒரு மீன்காட்சிச்சாலை ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதென முடிவு செய்து அதற்காக இந்த ஆண்டில் 2 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறது. இம்மாதிரி ஒரு மீன்காட்சிச்சாலை நம்முடைய

நகரில் அமைய வேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கை பூர்த்தியாவதை கனம் அங்கத்தினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

பஞ்சாயத்து ஆட்சிமுறை.

22. விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் இது போன்ற பல அபிவிருத்தித் திட்டங்கள் கிராமப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஒரு பகுதியாகும். கிராமப் பொருளாதாரம் உயர வேண்டுமென்றால், கிராம வளர்ச்சிக் கானத் திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றை நிறை வேற்றுவதிலும் பொதுமக்கள் அதிகப் பொறுப்பை மேற் கொள்ள வேண்டும். இந்தக் குறிக்கோளுடன்தான் நாம் பஞ்சாயத்துக்களையும், பஞ்சாயத்து யூனியன்களையும் நிறுவி அவைகளுக்கு அதிக அதிகாரங்களையும் நிதி வசதிகளையும் வழங்கினோம். கடந்த ஓராண்டுக்காலத்தில் இந்த மக்கள் நிறுவனங்கள் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களை நிறை வேற்றுவதில் மிகுந்த உற்சாகத்தையும் பொறுப்புணர்ச்சி யையும் காட்டியிருக்கின்றன என்பதைப் பார்த்து நாம் எல்லோரும் மகிழ்ச்சி யடைகிறோம். குடிதண்ணீர், இணைப்புப் பாதைகள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் போன்ற இன்றி யமையாத வாழ்க்கை வசதிகளை உருவாக்குவதில் இந்த நிறு வனங்கள் மிகவும் சிரத்தை காட்டியிருக்கின்றன. அவை காட்டிய அக்கறை, செயல்திறன் இவற்றின் காரணமாகக் கடந்த ஆண்டில் 3 கோடி ரூபாய் அரசாங்க மானியமாக இந்த வேலைகளுக்காகச் செலவாகி இருக்கிறது. நடப்பு ஆண்டிலும் இந்த வேலைகளுக்காகப் போதிய அளவு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. பணம் முழுவதும் நல்ல முறையில் செலவழிக்கப்படும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக் கின்றது. ஆக்க வேலைகளுக்காக மக்களிடமிருந்து நன் கொடைகளைப் பெறுவதில் அவர்கள் தங்களுடைய தீர்க்க தரிசனத்தைக் காட்டியிருக்கிறார்கள். அபிவிருத்தித் திட்டங் களுக்காக நிதிவசதிகளை வரி விதிப்பின் மூலம் பெருக்கிக் கொள்வதற்கும் அவர்கள் தைரியமாக முன் வந்திருக் கிறார்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிக அதிகாரங் களுக்கு ஏற்ப பொறுப்புணர்ச்சியுடன் நடந்து, அதிகாரி களுடன் பொதுமக்களின் நலனை மனத்திற்கொண்டு ஒத் துழைத்திருக்கிறார்கள்.

23. தங்களுடைய வட்டாரங்களில் விவசாய உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுகின்ற பொறுப்பையும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைத்திருக்கின்றோம். இந்தப் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக ஒவ் வொரு வட்டாரத்திற்கும் 2 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக் கின்றோம். இந்த மானியத்தைப் பயன்படுத்திக்கொண்டு

ஊர் நிலைக்கேற்பத் திட்டங்களை வகுப்பதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உரிமை வழங்கியிருக்கின்றோம். திட்டங்களை வகுப்பதிலும் நிறைவேற்றுவதிலும் பொதுமக்களையும் இணைத்திருப்பதால் மிகவும் முக்கியமான இந்த விவசாய உற்பத்தித் துறையில் நம்முடைய முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும் என்பதில் எனக்கு ஐயமில்லை. திட்டங்களைத் தீட்டுதல், திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகிய இந்த இரண்டு பொறுப்புகளையும் இம்மாதிரி பரவலான முறையில் செய்வதன் மூலம்தான் நம் மக்களிடையே தேசீயத் திட்டத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம் என்கின்ற உணர்ச்சியை உருவாக்க முடியும்.

கூட்டுறவு.

24. கிராமப் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்ளக்கூடிய மற்றோர் ஜனநாயக ஸ்தாபனம் கூட்டுறவுச் சங்கம். இந்தத் துறையிலும் நாம் வெகுவாக முன்னேறியிருக்கிறோம். இப்பொழுது அனேகமாக எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. கிராம மக்கள் தொகையில் 62 சத விகிதத்தினர் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இப்பொழுது வழங்கப்படுகின்ற கடன் தொகை கிராமப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது. 1961-62-ம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு 31·47 கோடி ரூபாய் கடன்களாக வழங்கின. நம்முடைய லட்சியம் 28 கோடி ரூபாய்தான். எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகச் சாதித்திருக்கின்றன. நம் மாநிலத்தின் சில பகுதிகளில் இப்பொழுது அமுலாகிவரும் முழுப் பண உதவித் திட்டத்தைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே விவசாயிகளின் கடன் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வதுதான் இத் திட்டத்தின் நோக்கம். இந்தத் திட்டம் நடப்பு ஆண்டில் மேலும் 56 வட்டாரங்களுக்கு விஸ்தரிக்கப்படும். தங்களுடைய விவசாய உற்பத்திக்குத் தேவையான பணத்தைக் கடனாக வாங்குவதற்குப் போதிய நிலபுலன்களை ஈடு காட்ட முடியாத நிலையில் பலர் உள்ளனர். இவர்களுக்கும் இது போன்ற சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கும் குடியானவர்களுக்கும் கூட்டுறவு முறையில் கடன் வசதி செய்து கொடுக்க நாம் முயன்று வருகிறோம். தீவிர விவசாய உற்பத்தித் திட்டம் அமுலில் இருக்கின்ற தஞ்சை மாவட்டத்தில் இந்த இலட்சியத்தை அடைவதில் ஆரம்ப வெற்றி கிடைத்திருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாய உற்பத்தித் திட்டத்தையொட்டி, விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கடன் வசதி பெற்ற 26 ஆயிரத்திற்கும்

மேலான அங்கத்தினர்களில் 8,200 பேர் நிலமற்ற குடியான வர்கள் ; 5,229 பேர் சொந்த நிலமுள்ள குத்தகைதாரர்கள். எல்லா விவசாய உற்பத்தியாளர்களும் நிலச் சொந்தக் காரர்களாய் இருந்தாலும் சரி, குடியானவர்களாய் இருந் தாலும் சரி கடன் வசதி பெறுகின்ற முறையில் நம்முடைய கூட்டுறவு அமைப்பை விரிவுபடுத்த வேண்டும். ஆனல், அங்ஙனம் விரிவுபடுத்துவதில் நஷ்டம் ஏற்படுமோ என்ற ஆபத்து ஓரளவு இருப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத் துக்கு உத்தரவாதம் எதிர்பார்ப்பது இயற்கை. ஏழைக் குத்தகைதாரர்களுக்குக் கடன் வழங்குவதால் ஏற்படுகின்ற நஷ்டத்தை ஓரளவு தாங்கக்கூடிய சக்தியைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரும் வகையில் அவைகளுடைய க்ஷேம நிதிகளை (Reserve funds) நாம் பலப்படுத்த வேண்டும். எனவே, ரிசர்வ் பாங்கு ஸ்தாபனத்தின் ஆலோசனையை யொட்டி 80 லட்சம் ரூபாய் கொண்ட வசூலாகாக் கடன் விசேஷ க்ஷேம நிதி (Special Bad Debt Reserve Fund) ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது. முதற்படியாக, இந்த ஆண்டு இதற்கென 12 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்ேறாம். இந்தப் பணம் கூட்டுறவுச் சங்கங் களிடையே வினியோகிக்கப்படுவதன் மூலமாக ரிசர்வ் பாங்கு போன்ற கடன் வழங்கும் ஸ்தாபனங்கள் இன்னும் தாராள மாகக் கடன் வழங்குவார்கள் என்றும், அதன் காரணமாக கூட்டுறவுத் துறையில் நிதி வசதிகள் இன்னும் பெருகும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம். மேலே சொன்ன க்ஷேம நிதி யிலிருந்து ஒவ்வொரு சங்கத்திற்கும் கடந்த ஆண்டில் கொடுத்த கடன்களுக்கு மேற்பட்டு நடைமுறை ஆண்டில் கொடுக்கிற கூடுதல் கடன்களில் மூன்று சத விகிதமும், அதேபோன்று மத்திய பாங்குகள் கொடுக்கின்ற கூடுதல் கடனில் ஒரு சத விகிதமும் மானியமாகத் தரப்படும். அதி தீவிர விவசாய உற்பத்தித் திட்டம் (Package Scheme) அமுலில் இருக்கின்ற பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நான்கு சத விகிதமும் மத்திய பாங்குக்கு இரண்டு சத விகிதமும் மானியமாக வழங்கப்படும்.

25. கூட்டுறவு விவசாயப் பண்ணைகளும் மேலும் வளர்ச்சி யடைந்திருக்கின்றன. 1961-62-ல் 26 கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் துவக்கப் பெற்றன. அவைகளுக்குப் பங்குத் தொகைக் கடன், நடைமுதல் கடன் மற்றும் மானியங்கள் இவற்றை வழங்குகிறோம். கூட்டுறவுப் பண்ணை முறையில் முன்னோடித் திட்டங்களை சேலம், செங்கற்பட்டு, கோவை மாவட்டங்களில் அமுலாக்க முடிவு செய்துள்ளோம். முன் னோடித் திட்டம் அமுலாக்கப்படுகின்ற ஒவ்வொரு

பகுதியிலும் நடைமுறை ஆண்டில் 10 கூட்டுப் பண்ணைகளை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதைத் தவிர ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் 9 கூட்டுறவுப் பண்ணைகளையும், முன்னோடித் திட்டப் பகுதிகளல்லாத பகுதியில் 5 கூட்டுப் பண்ணைகளையும் நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தொழில் வளர்ச்சி—மத்திய அரசாங்க திட்டங்கள்.

26. தொழில் வளர்ச்சியில் — தனியார் துறையிலும் சரி, பொதுத் துறையிலும் சரி—நம்முடைய மாநிலம் பின் தங்கிவிடவில்லை. தொழில் வளர்ச்சியில், முக்கியமாக கனரகத் தொழில் வளர்ச்சியில், மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், தனியார் ஆகிய மூன்று பிரிவினரும் சிரத்தை காண்பித்து வருகின்றனர். பொதுத் துறையில் நம்முடைய மாநிலத்திலேயே பெரிய திட்டம் நெய்வேலி பழுப்பு நிலக் கரித் திட்டமாகும். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கின்ற 20,000 லட்சம் டன்கள் மதிப்பிடப்படுகிற பழுப்பு நிலக்கரிக் கனி வளத்தைப் பயன்படுத்துதலே இத் திட்டத்தின் நோக்கம். வெட்டியெடுக்கப்படுகிற பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்கும், உர உற்பத்திக்கும், சுட்ட அச்சுக் கரிக்கட்டைகள் (Carbonised briquettes) உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும். சுரங்க வேலையின்போது இடையிலே கிடைக்கும் வெள்ளைக் களிமண்ணைப் பதம் செய்து பீங்கான் பாத்திரங்கள், ‘ இன்சுலேட்டர்கள் ’ போன்ற பொருள்களையும் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. களிமண் பதனிடும் தொழில் நிலையம் உற்பத்தி தொடங்கி விட்டது. இரண்டரை லட்சம் கிலோவாட் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின்சார நிலையம் ரஷ்ய உதவியுடன் நிறுவப்படுவது கனம் அங்கத்தினர்களுக்கு நினைவிருக்கலாம். இந்த நிலையத்தின் 50,000 கிலோவாட் உற்பத்தியளவுள்ள முதல் பகுதிக்கான இயந்திரங்கள் முழுவதும் வந்து, கட்டிட வேலைகள் எல்லாம் பூர்த்தியாகி, பரீட்சார்த்த வேலை துவங்கி விட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். யூரியா உப்பு உற்பத்தித் தொழிற்சாலை இத்தாலியர்களின் உதவியைக் கொண்டு உருவாகி வருகிறது. இதற்கான கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன ; இயந்திரங்களில் ஒரு பகுதியும் வந்து சேர்ந்து விட்டது. சுட்ட அச்சுக்கரிக் கட்டைத் தொழிற்சாலையைப் பொறுத்த வரை இரும்புக் கட்டுமான சாமான்கள் வந்து விட்டன ; இயந்திரங்களும் வரத் தொடங்கி விட்டன. கடந்த ஆண்டில் நெய்வேலித் திட்டத்தில் கண்ட அபிவிருத்தியைப் பற்றி

நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்; நம்முடைய மாநிலத்தின் எதிர்கால வாழ்விற்கு ஜீவாதாரமாகவிருக்கும் நெய்வேலித் திட்டம் நமக்கு நம்பிக்கையூட்டுகிறது.

27. நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியையும், சேலத்திலிருக்கும் இரும்புக் கனிப்பொருளையும் பயன்படுத்தி, அவற்றின் அடிப்படையில் ஓர் உருக்குத் தொழிற்சாலையைத் தமிழ் நாட்டில் நிறுவுவதே நம்முடைய இலட்சியம். இது சம்பந்தமான பூர்வாங்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவது அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கலாம். குறைந்த ஷாப்டு உலை (low shaft furnace) முறையில் சேலம் இரும்புக் கனியையும், உயர் வெப்பத்தில் வேக வைக்கப்பட்ட பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்துவதைப்பற்றி கிழக்கு ஜெர்மனியில் உள்ள ஆய்வுக் கூடத்தில் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பரிசோதனைகளைக் காண்பதற்கும், பரிசோதனைகளின் அடிப்படையில் ஓர் அறிக்கையைத் தயாரிப்பதில் உதவி செய்வதற்கும் நம்முடைய அதிகாரிகளில் ஒருவரை அனுப்பியிருக்கிறோம். இதுவரையில் நமக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து உலோக உற்பத்திக்குப் பயன்படக்கூடிய வேக வைக்கப்பட்ட நிலக்கரியை நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. சேலம் இரும்புக்கனியைப்பற்றி ஜெம்ஷெட்பூர் தேசீய உலோகவியல் ஆய்வுக்கூடத்திலும் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இந்தப் பரிசோதனைகளிலிருந்து பட்டறைத் தொழிலுக்கும், உருக்கு உற்பத்திக்கும் லாயக்கான தேன் இரும்பை சேலம் இரும்புக் கனியிலிருந்து உற்பத்தி செய்ய முடியும் என்ற முடிவு ஏற்பட்டிருக்கிறது.

28. நம்முடைய மாநிலத்தில் செயல்படும் மற்ற மத்திய அரசாங்கத் தொழில் திட்டங்களும் விரைவாக முன்னேறி வருகின்றன. மத்திய அரசாங்கத்திற்கு முழுவதும் சொந்தமான ‘இந்துஸ்தான் டெலிபிரின்டர்’ ஸ்தாபனம் டெலிபிரின்டர்களை உற்பத்தி செய்கிற தொழிற்சாலையை கிண்டிக்கு அருகில் நிறுவி வருகிறார்கள். தொழிற்சாலைக்கான 35 ஏக்கர் நிலத்தை மாநில அரசாங்கம் இனமாகக் கொடுத்து உதவியிருக்கிறது. தொழிற்சாலைக்கான கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ரஷ்யர்களுடைய உதவியைக் கொண்டு, மத்திய அரசாங்கம், ரண சிகிச்சைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றையும் அமைத்து வருகிறார்கள். தொழிற்சாலை, தொழிலாளர் வீடுகள் இவற்றிற்கான நிலம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. அலுவலகக் கட்டிடங்கள் உருவாகி வருகின்றன. நீலகிரியில் பிரசித்திபெற்ற ஒரு பிரெஞ்சு ஸ்தாபனத்தின் தொழில்

நுணுக்க உதவியுடன் சினிமாப் படம், நிழற் படம், எக்ஸ்ரே படம் இவற்றிற்கு லாயக்கான கச்சா படச்சுருள் தயாரிப்புத் தொழிற்சாலைக்கான வேலைகள் நடந்து வருகின்றன. 280 ஏக்கர் நிலத்தைத் தொழிற்சாலைக்கு இனமாகக் கொடுத் திருக்கிறோம். தொழிற்சாலைக்குத் தேவைப்படும் தண்ணீரை யும் சந்தியாநல்லா (Sandynalla) நீர்த்தேக்கத்திலிருந்து வழங்க ஏற்பாடாகியிருக்கிறது. தொழிற்சாலைக் கட்டிட வேலை நடைபெற்று வருகிறது. இயந்திரங்களைத் தருவிப் பதற்கும் உத்தரவு கொடுக்கப்பட்டு, 10 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரம் வந்து சேர்ந்துவிட்டது.

29. மத்திய அரசாங்கம் நிறைவேற்ற முன் வந்திருக்கும் மற்றொரு மாபெரும் திட்டம் திருச்சிராப்பள்ளிக் கருகில் உருவாகி வரும் கனரகக் கொதிகலன் (High Pressure Boiler Plant) தொழிற்சாலையாகும். இந்தத் தொழிற் சாலைக்கான பூர்வாங்க வேலைகளும் தீவிரமாக முன்னேறி வருகின்றன. தொழிற்சாலைக்குத் தேவையான 3,050 ஏக்கர் நிலத்தில், 2,450 ஏக்கர் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப் பட்டுவிட்டது. தொழிற்சாலைக்கான விரிவான திட்டத்தைத் தயாரிப்பதில் செக்கோஸ்லோவேகியாவில் உள்ள நிபுணர் களுக்கு உதவியாக இருக்க இந்திய அலுவலர் கோஷ்டி ஒன்று செக்கோஸ்லோவேகியாவிற்குச் சென்றிருக் கிறது. திட்டம் ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்திற்குள் தயா ரிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

30. மேலும், ஆவடியில் இராணுவ சாதனத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதென இந்திய அரசாங்கம் முடிவு செய் துள்ளது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இந்தத் திட்டத்திற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. திட்டத்திற்குத் தேவைப்படும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் முயன்று வருகிறது. இந்தத் திட்டத்திற்காக 100 தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியிருப் பதால் பயிற்சியாளர்கள் தங்குவதற்கு ஒரு விடுதியையும் அரசாங்கம் கட்டிக் கொடுத்திருக்கிறது.

31. தொழில் வளர்ச்சிக்காகத் தீட்டியிருக்கிற திட்டங் களையும், அவற்றிற்கான முதலீடுகளையும் மதிப்பிடும்பொழுது மத்திய அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பில் செயல்படும் மேற்கூறிய மாபெரும் தொழிற்சாலைத் திட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

32. அரசாங்கத்தின் பல துறைகளிலும் மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்தி வேலைகள், அதுவும் குறிப்பாகப் பொது மராமத்து தொழில்துறைகளின் வேலைகள், இரும்பு, எஃகுத் தளவாடங்கள் போதிய அளவிற்குக் கிடைக்கப்பெறுமையால் தடைப்படுகின்றன. ஆகையால் அரசாங்கத்தின் தேவையில் ஒருபகுதியையாவது நிறைவு செய்வதற்கு பொதுத் துறையில் 20,000 டன் உற்பத்தித் திறன் உள்ள உருக்கு உருளை ஆலை (steel rerolling mill) ஒன்றினை நிறுவ முடிவு செய்து, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலையை நிறுவுவதற்கான 'லைசன்ஸிற்காக' இந்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பித்திருக்கின்றோம். மாநில அரசாங்கத் திட்டம்.

33. தொழில் துறையில் நம் மாநிலம் அடைந்திருக்கும் வளர்ச்சியை அளவிடுவதில், புதிய தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு தனியார் துறையில் நடக்கும் முயற்சிகளையும் மனத்திற்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டில் மாத்திரம், இயந்திரங்கள், மோட்டார் கருவிகள், விசேஷ உருக்கு சாமான்கள் போன்ற பொருள்களைச் செய்வதற்கான 45 பொறியியல் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. விசேஷ உருக்குகள் (special steels), கருவி அமைப்பு உருக்குகள் (tool steels), அதிவேக உருக்கு (high speed steel), நிக்ரோம் உருக்கு (nichrome steel) போன்ற உருக்குப் பொருள்களை உற்பத்தி செய்ய மூன்று தொழிற்சாலைகளுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றொரு தொழிற்சாலை 48,000 டன் மின்தடை இணைப்பு உருக்குக் குழாய்கள் (electric resistant welded steel tubes) உற்பத்திக்கு அனுமதி பெற்றிருக்கிறது. இரும்புக் குழாய்கள் செய்ய ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி தரப் பட்டுள்ளது. மற்றொரு தொழிற்சாலைக்கு மரைன் டீசல் என்ஜின்களும், மற்ற என்ஜின்களும் உற்பத்தி செய்ய அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மோட்டார் சாமான்களும், உபகரணங்களும் செய்துவரும் 'இந்தியா பிஸ்டன்' ஸ்தாபனத்தார் தங்களுடைய உற்பத்தியை வெகுவாகப் பெருக்குவதற்கு அனுமதி கேட்டு வாங்கியிருக்கிறார்கள். மரக்கூழ், காகிதத் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் இவற்றைச் செய்ய இரண்டு ஸ்தாபனங்களுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றொரு ஸ்தாபனத்திற்கு செயற்கைப் பட்டுத் தொழிலுக்கேற்ற சோடா காரமும், கந்தக அமிலமும் உற்பத்தி செய்ய அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும், அரக்கோணத்தில் "பால் பேரிங்குகள்" (ball bearings) செய்யும் தொழிற்சாலையும், ஹோசூரிலும், கோயம்புத்தூரிலும் "மெஷின் டூல்கள்" செய்யும் தொழிற்சாலைகளும் விரைவில் ஏற்படும். தனியார் துறை.

34. இரசாயனத் தொழில் துறையிலும் நாம் வெகுவாக முன்னேறியிருக்கிறோம். தராங்கதாரா ஸ்தாபனத்தாரும், இந்தியா சிமெண்ட் ஸ்தாபனத்தாரும் '' பாலி வினைல் க்ளோரைட் '' (Poly-Vinyl-Chloride) என்ற பொருளை உற்பத்தி செய்வதற்கு அங்கீகாரம் பெற்றிருக்கிறார்கள். ' கால்ஷியம் கார்பைட் ' செய்வதற்கு தராங்கதரா தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

35. சேஷசாயி ஸ்தாபனத்தாரின் காகிதத் தொழிற்சாலை வேகமாக முன்னேறி வருகிறது. காகிதத் தயாரிப்பிற்கு மூலப் பொருளான மூங்கிலை அரசாங்கக் காடுகளிலிருந்து நியாயமான விலைக்குக் கொடுத்து உதவ அரசாங்கம் சம்மதித் திருக்கிறது. 1961-62-ம் ஆண்டில் மேலும் இரண்டு காகிதத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளும் மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் உருவாகுமென நம்பலாம்.

36. தென் இந்திய ' விஸ்கோஸ் ' ஸ்தாபனத்தில் செயற் கைப் பட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கிவிட்டது. '' மதராஸ் அலுமினியம் கம்பெனி ''யும் கணிசமான அளவு முன்னேறியிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தினர் சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலைத்தொடர் பிர தேசத்தில் கிடைக்கும் ' பாக்ஸைட் ' என்ற கனிப்பொருளை பயன்படுத்தி 10,000 டன் அலுமினிய உலோகக் கட்டி களையும், அலுமினியக் கலவைப் பொருளையும் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கின்றனர். தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் மேட்டூரில் கட்டப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்கு இத்தாலியிலிருந்து தொழில் நுட்ப வசதியும், செலாவணி வசதியும் கிட்டியிருக்கின்றன.

37. நீண்டதொரு கடற்கரையைத் தமிழ் நாடு பெற்றி ருப்பதால், இந்தியாவில் உப்பு உற்பத்தியில் சிறந்த மாநிலங் களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஆகவே, உப்பைச் சார்ந்த இரசாயனத் தொழில்களை ஏற்படுத்த தமிழ் நாட்டில் வாய்ப்பு இருக்கிறது. உப்பளங்களில் உப்பு படிகங்க ளெல்லாம் அகற்றப்பட்ட பிறகு தேங்கி நிற்கும் உப்பு திரவத்திலிருந்து பொட்டாஷியம் க்ளோரைட், புரோமைட் முதலியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய இரசாயனத் தொழில்களை நிறுவ முடியும். தஞ்சை மாவட்டத்தில் வேதா ரண்யம் சதுப்பு நிலப்பகுதியில் அத்தகைய தொழிற்சாலை ஒன்றைத் தனியார் துறையில் அமைக்க இந்திய அரசாங்கம் அனுமதி தந்திருக்கிறது. அதேபோன்று வேதாரண்யத்தில் மற்றொரு தொழிற்சாலை அமைப்பதற்கும் இந்திய அரசாங் கத்திடமிருந்து அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

38. இரண்டாவது திட்டக் கால முடிவில் நம் மாநிலத்தில் தனியார் துறையில் 5 சர்க்கரை ஆலைகளும், கூட்டுறவுத் துறையில் 3 சர்க்கரை ஆலைகளும் இருந்தன. இப்பொழுது மேலும் 8 சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. அவற்றுள் 3 ஆலைகள் கூட்டுறவுத் துறையில் சேலம் மாவட்டம் மோகனூரிலும், தென் ஆர்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியிலும், மதுரை மாவட்டம் சமயநல்லூரிலும் அமையும். இந்த ஆலைகள் எல்லாம் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் நிறைவு பெறும். சர்க்கரை உற்பத்தி நம்முடைய மாநிலத்தில் அதிகரித்து வருவதால், சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் 'வெல்லக்கசடை'க் (Molasses) கொண்டு எரிபொருள் சாராயம் (Power Alcohol) தயார் செய்வதற்கு ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது.

39. இதுபோன்று தனியார் துறையில் பல தொழில்களையும் நிறுவுவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளில் ஊக்கமும், உதவியும் அளித்து வந்துள்ளது. இந்திய அரசாங்கத் திடமிருந்து 'லைசன்ஸ்' பெறுவதற்கும், தண்ணீர் வசதி, மின்சார வசதி, போக்குவரவு வசதிகள் போன்ற வசதி களையும் அரசாங்கம் அவ்வப்பொழுது தயங்காமல் ஏற் படுத்திக் கொடுக்கிறது.

40. தமிழ்நாடு அரசாங்கம் பெரும் பங்கு வகிக்கும் ''தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம்'' (Madras Industrial Investment Corporation) பல புதிய தொழில்களுக்கு நீண்டகாலக் கடன்வசதிகளைக் கொடுத்து ஊக்குவித்து வருகிறது. சென்ற ஆண்டில் மாத்திரம் 123 லட்சம் ரூபாய் அளவிற்கு தொழில் ஸ்தாபனங்களுக்குக் கடனுதவி யளித்திருக்கிறது. அயல் நாடுகளிலிருந்து தவணை முறையில் இயந்திரங்களைத் தருவிப்பதற்கும் பல ஸ்தாபனங் களுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது.

41. பொறியியல் தொழில்களைப் பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக அரசாங்கம் ஒரு தொழில் ஆலோசகரை நியமிப்பதென முடிவு செய்துள்ளது. தொழில் ஆலோசகர் தயாரிக்கும் திட்ட அறிக்கைகள் புதிய தொழில்களை நிறுவ முன் வருவோர்க்கு இலவசமாகத் தரப்படும். இங்ஙனம் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், தொழிலதிபர்கள் ஆக இம்மூன்று சாராரும் சேர்ந்து ஒத்துழைப்பதால்தான் இன்று தமிழ் நாடு தொழில்துறையில் செழித்தோங்கியிருக்கிறது.

தொழிற் கல்வி.

42. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அந் நாட்டில் உள்ள தொழிற்பயிற்சிக்கான வசதிகளைப் பொறுத்திருக்கும். ஆகவேதான், தொழிற் கல்வி வளர்ச்சியில் நாம் போதிய கவனம் செலுத்தி வந்துள்ளோம். இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் 2 பொறியியற் கல்லூரிகளும், 14 பாலிடெக்னிக்குகளும் நிறுவப்பட்டன. இதனல் பொறியியற் கல்லூரிகளில் இட வசதி இரண்டு மடங்கும் பாலிடெக்னிக்குகளில் இட வசதி மூன்று மடங்கும் அதிகரித்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பயிற்சிக்கான வசதிகளைப் பெருக்குவதில், மாநில, மத்திய அரசாங்கத் திட்டங்களின் தேவையையும் தனியார் துறையின் தேவையையும் மனத்தில் கொண்டிருக்கிறேம். நம்முடைய மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு ஓரளவு பொறியியல் வல்லுநர்கள் செல்வார்கள் என்பதையும் கணக்கெடுத்துக் கொண்டிருக்கின்றேம்.

43. ஆண்டிற்கு 250 மாணவர்களுக்குச் சேர இடவசதி உள்ள ஒரு பிராந்திய பொறியியல் கல்லூரி திருச்சிராப்பள்ளி யில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆரம்பிக்கப் படும். இந்தத் திட்டத்திற்காக இந்திய சர்க்கார் 60 லட்சம் ரூபாய் செலவு செய்யும். மாநில அரசாங்கம் நிலங்களுக்காகும் செலவையும் ஆண்டுதோறும் தொடர்ந்து வரும் செலவு களையும் ஏற்கும். இந்தக் கல்லூரிக்கான நிலங்களை விலை கொடுத்து வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதற்கென இந்த பட்ஜட்டில் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

44. நம்முடைய மாநிலத்தில் இரசாயனத் தொழிற்சாலை கள் பல தோன்றியிருப்பதால் செயற்கை உர உற்பத்தி போன்ற தொழில்களில் தனியார் துறையிலும் சரி பொதுத் துறையிலும் சரி தேவைப்படுகின்ற மேற்பார்வையாளர் களுக்கென ஒரு விசேஷப் பயிற்சி நிலையம் தேவைப்படுகிறது. இந்த பயிற்சி நிலையம் நிறுவுவதைப்பற்றி ஆராய்ந்து, ஆலோசனைகள் கூற ஒரு வல்லுநர் குழுவை அமைத்திருக் கிறேம். அவர்களுடைய அறிக்கை வந்ததும், இந்தப் பயிற்சி நிலையத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யும். இம்மாதிரி பயிற்சி நிலையம் நிறுவுவதற்கு மொத்தம் 12 லட்சம் ரூபாய் செலவாகும். அதற்காக அடையாள மானியம் இந்த பட்ஜட்டில் ஒதுக்கப் பட்டுள்ளது.

45. கோவையில் உள்ள பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரியிலும், காரைக்குடி அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியிலும் பாலிடெக்னிக்குகளும் இணைந்து இருக்கின்றன. இப்பொழுது இந்த இரண்டு ஸ்தாபனங்களிலும் கல்லூரிப் பிரிவுகளில் அதிக மாணவர்களை எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருப்பதால் பாலிடெக்னிக்குகளைத் தனியாக இந்த ஸ்தாபனங்களில் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இந்த ஸ்தாபனங்களுக்கு அரசாங்கத்தின் பங்காக கொடுக்க வேண்டிய மானியத் தொகையாக 2 லட்சம் ரூபாய் இந்த பட்ஜட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

46. தொழிற் கல்வி பயில்வோருக்கு செலவு அதிகம். எனவே, இந்தப் பயிற்சி பெறும் ஏழை மாணவர்களில் ஒரு பகுதியினருக்கு நிதியுதவி செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்காக அரசாங்கம் யோசித்து வந்திருக்கிறது. இந்த இலட்சியத்தையொட்டி, சமீபத்தில் கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், இவர்களுடைய குழந்தைகளுக்கு தொழிற் கல்லூரிகளில் படிப்பதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது கனம் அங்கத்தினர்கள் யாவருக்கும் தெரியும். இம்மாதிரி தொழிற் கல்விக்காக வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் தகுதியும் திறனும் உள்ள எல்லா ஏழை மாணவர்களுக்குமே விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. வட்டியில்லாக் கடன்கள் மாணவர்களுக்கு நபர் ஜாமீனின் பேரில் தரப்படும். கடனை அவர்கள் படிப்பு முடிந்ததும் தங்களுடைய எதிர்கால வருமானத்திலிருந்து திருப்பித் தர வேண்டும். இத் திட்டம் ஏழை, நடுத்தரக் குடும்பங்களிலுள்ள மாணவர்களை இன்னும் அதிக அளவில் பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விக்கூடங்களில் சேர ஊக்கமளிக்கும் என்றும், இதன் மூலம் தமிழகத்தைச் சேர்ந்த பல பிரிவினருக்கும் உண்மையான சம வாய்ப்புக்கள் கிடைக்குமென்றும் நான் நம்புகிறேன்.

47. மகளிர்க்கென்று தனியாக ஒரு பாலிடெக்னிக்கை சென்னை நகரில் நிறுவுவதற்கு அரசாங்கம் சமீபத்தில் அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தப் பாலிடெக்னிக்கில் மகளிர்க்கேற்ற விசேஷ தொழிற் படிப்பிற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

48. வளர்ந்து வரும் நம்முடைய தொழில்களின் தேவையை பொறியியற் கல்லூரிகளாலும் பாலிடெக்னிக்குகளாலும் மட்டும் பூர்த்தி செய்துவிட முடியாது. நமக்கு பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் பலர் தேவை. எனவே, தொழிலாளர் களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக 14 தொழிற் பயிற்சிக் கூடங்களையும் நிறுவுவதற்குத் திட்டமிட்டு இருக்கிறோம். 1961-62-ம் ஆண்டில் சேலம், காட்பாடி, அரியலூர், தஞ்சாவூர், திருச்செந்தூர், பொள்ளாச்சி ஆகிய ஆறு இடங் களில் தொழிற் பயிற்சிக்கூடங்கள் நிறுவப்பட்டன. இவற்றில் முதலில் பொள்ளாச்சியில் நிறுவப்பட்ட பயிற்சிக்கூடம் இப்பொழுது தாராபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மேலும் ஆறு பயிற்சிக்கூடங்கள் செங்கற்பட்டு, கூனூர், பரமக்குடி, மதுரை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் துவக்கப்படும். மேலும் தொழிற்சாலை களில் 'வேலை பழகுவோர்' (Apprentices) பயிற்சி பெறுவதற்கான திட்டத்தையும் நாம் மேற்கொண்டிருக்கி றோம். இந்தத் திட்டம் தொழிலதிபர்களுடைய ஒத்துழைப் புடன்தான் வெற்றிகரமாகச் செயல்பட முடியும். நாட்டின் தொழில் வளர்ச்சியின் நிமித்தம் அவர்கள் இந்தப் பயிற்சித் திட்டம் பெருமளவில் நடைபெறுவதற்கு உதவுவார்கள் என நம்புகிறேன். இம்மாதிரி பயிற்சி வசதிகளைச் செய்து கொடுப்பது புதிதாக 1961-ம் ஆண்டில் இயற்றப்பட்ட வேலை பழகுவோர் பயிற்சிச் சட்டத்தின்படி அவர்களுடைய கடமை என்பதையும் நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். இப் பயிற்சித் திட்டத்தைச் செயலாற்று வதற்கு முன்னர் பல தொழிற்சாலைகளிலும் பயிற்சி வழங்கு வதற்குள்ள வசதிகளைப் பற்றிக் கணக்கெடுத்து வருகிறோம்.

49. நம்முடைய தொழிலாளர்கள் அன்றாட அலுவல்களுக் குக் குந்தகமின்றி மாலை நேரங்களில் பயிற்சி பெற்று மேலும் தங்களுடைய திறமையை அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்த வேண்டும். அங்ஙனம் செய் தால்தான் தொழிலாளர்கள் படிப்படியாக தங்களுடைய துறைகளில் முன்னேறமுடியும். இந்நோக்குடன்தான் தொழிற்பயிற்சிக் கூடங்கள் சிலவற்றில் தொழிலாளர் களுக்கென மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகிறோம். இம்மாதிரி மாலை வகுப்புகள் சென்னையில் பிராட்வேயிலும், கிண்டியிலும் நடைபெற்று வருகின்றன. சென்ற ஆண்டில் கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சிக் கூடத்திலும் மாலை நேர வகுப்புகளை ஆரம்பித்தோம். இந்த ஆண்டில் மதுரைக்கு இத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

50. பெரும் கனரகத் தொழில்கள் மூலமாக மாத்திரம் நம்முடைய மக்களின் வாழ்க்கைத்தரத்தை வெகுவாக உயர்த்துவதோ அன்றி எல்லோருக்கும் வேலை வாய்ப்புக்களை தேடித் தருவதோ இயலாது. பரவலான முறையில் சிறு தொழில்களை வளர்ப்பதன் மூலம்தான் நம் மாநிலத்தில் வேலை வாய்ப்புக்களைக் கணிசமாகப் பெருக்க முடியும். சிறு தொழில்களை நிறுவுவதற்குள்ள பிரச்சினைகளைப் பற்றி ஓரளவு ஆராய்ந்து பரவலாக சிறு தொழில்கள் வளருவதற்கான வழிவகைகளைக் கண்டிருக்கிறோம். சிறு தொழில்களை வளர்ப்பதற்காக நாம் எடுத்துக்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கை தொழிற்பேட்டைகளை நிறுவியதுதான். இத் தொழிற்பேட்டைகளில் மின்சாரம், தண்ணீர் போன்ற பொதுவான வசதிகளுடன்கூட கட்டிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்டக் காலத்தில் இம் மாநிலத்தில் ஏழு தொழிற்பேட்டைகளை உருவாக்கினோம். அவற்றுள் கிண்டியில் இருக்கும் பெரிய தொழிற்பேட்டையைப் பார்த்துப் பலரும் பாராட்டியுள்ளார்கள். சென்ற ஆண்டில் தஞ்சாவூரிலும், காட்பாடியிலும் இரண்டு தொழிற்பேட்டைகளைக் கட்டி முடித்து அவைகளும் இயங்க ஆரம்பித்து விட்டன. சேலத்தில் ஒரு தொழிற்பேட்டைக்காக நிலங்கள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னேறி வருகின்றன. மேலும் புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கும் ஏற்கனவே உள்ள தொழிற்பேட்டைகளை விஸ்தரிப்பதற்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3·20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 5.37 லட்சம் ரூபாய் செலவில் தேனீயிலும், ஒன்றுக்கு 9·69 லட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டை, காரைக்குடி, கோயில்பட்டி, அரக்கோணம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். திண்டுக்கல்லில் 15.91 லட்சம் ரூபாய் அளவில் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். தவிர, விருத்தாசலத்தில் பீங்கான் தொழிலோடு இணைந்த ஒரு தொழிற்பேட்டையையும், பெரம்பூரில் தோல் சாமான்கள் செய்வதற்கான தொழிற்பேட்டையையும் ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். அம்பத்தூரில் 70 யூனிட்டுகள் கொண்ட ஒரு பெரிய தொழிற்பேட்டையை நிறுவுவதாகவும் உத்தேசித்துள்ளோம். ஆவடியைச் சுற்றியுள்ள பிரதேசம் வெகுவாகத் தொழில் மயமாகி வருவது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். அங்கே மேலும் நடுத்தர, பெருந் தொழில்கள் அதிகமாகத் தோன்றுவதற்கு ஊக்குவிக்கும் முறையில் தொழிலதிபர்களுக்கு வசதியுள்ள மனைக்கட்டுகளை

சிறு ரகத் தொழில்கள்.

(Developed Plots) வழங்குவதற்காக அரசாங்கம் அம்பத்தூரில் 60 லட்சம் ரூபாய்க்கு நிலங்களை விலை கொடுத்து வாங்கி வசதிகளை அமைத்துத் தர திட்டமிட்டுள்ளார்கள். இம்மாதிரி வசதியுள்ள நிலங்களை வழங்குவதன்மூலம் இந்த வட்டாரத்திற்குத் தொழிலதிபர்களை ஈர்க்க முடியும் எனவும், அதன் மூலமாகப் பெருகி வரும் நம்முடைய மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை அளிக்க முடியுமெனவும் நாங்கள் நம்புகிறோம்.

51. அரசாங்கம் நேரடியாக அமைக்கும் தொழிற்பேட்டைகள் ஒரு புறமிருக்க, பொள்ளாச்சி, தூத்துக்குடி, சிவகாசி, வியாசர்பாடி போன்ற இடங்களில் கூட்டுறவு முறையில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கும் திட்ட மிட்டிருக்கிறோம். எல்லா இடங்களிலும் நிலம் வாங்குவதற்கான நடவடிக்கைகள் அமுலில் உள்ளன. கோயம்புத்தூரில் தனியார் துறையில் ஒரு பெரிய தொழிற்பேட்டையை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கென 200 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. தனியார் துறையில் நிறுவப்படும் தொழிற்பேட்டைகளுக்கு அரசாங்கம் கடனுதவி செய்யும்.

52. சிறு தொழில்களின் முக்கியப் பிரச்சினை கடன் வசதியாகும். எனவே, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சிறு தொழில்களுக்கும் கடன்கள் வழங்குவதற்காக ஒரு தொழில் கூட்டுறவு பாங்கை அரசாங்கம் நிறுவியுள்ளது. இந்தப் பாங்கின் மூலதனம் முப்பது லட்சம். இந்த பாங்கு விரைவில் வேலை துவங்கும்.

மின்சார அபிவிருத்தி.

53. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான மின்சார அபிவிருத்தியில் நாம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். நமது மூன்றாவது திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ 2,90.89 கோடி செலவிடுவதாக உத்தேசித்துள்ளதில் பெரும்பகுதி அதாவது ரூ 100 கோடி மின்சார அபிவிருத்திக்கென ஒதுக்கியிருக்கிறோம். முதல் திட்ட ஆரம்ப காலத்தில் நமது மின்சார அமைப்பின் உற்பத்தித் திறனளவு 1,56,000 கிலோவாட்டுகளாக இருந்தது. அது இப்பொழுது 5,71,000 கிலோவாட்டுகளாக அதிகரித்துள்ளது. குந்தா நீர் மின்சாரத் திட்டம் மூன்றும் நிலை, மேட்டூர் சுரங்க நீர் மின்சாரத் திட்டம், பெரியாறு இரண்டாம் நிலை விஸ்தரிப்புகள், ஆனையலை நீர் மின்சாரத் திட்டங்கள் ஆகியவை நிறைவேறியவுடன், நமது மின் இணைப்பின் உற்பத்தித் திறனளவு 5,60,000 கிலோவாட் அதிகரிக்கும். நெய்வேலி பழுப்பு

நிலக்கரித் திட்டத்தோடு இணைந்த அனல் மின்சார நிலையம் இயங்க ஆரம்பித்தவுடன், தமிழ்நாடு மின் இணைப்புக்கு 1,81,000 கிலோவாட் மின்சாரம் கிடைக்கும். இத் திட்ட வேலைகள் நன்கு நடந்தேறி வருகின்றன. குந்தா ஒன்றும் நிலை, இரண்டாம் நிலை வேலைகள் மேல் பவானி அணைக்கட்டு நீங்கலாகக் கட்டி முடிக்கப்பட்டன. மேல் பவானி அணையும் 1963-64-ல் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். குந்தா மூன்றும் நிலை விஸ்தரிப்புத் திட்டம், கானடாவி லிருந்து கிடைக்கும் 2,20 லட்சம் டாலர் உதவியுடன் மிக விரைவாக நிறைவேறி வருகிறது. மேட்டூர் சுரங்க மின் சாரத் திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் பெரும்பாலும் பூர்த்தியாகி விட்டன. இத் திட்டத்துக்குத் தேவையான இயந்திரங்களையும் மின்சார உற்பத்தி சாதனங்களையும் ரஷ்யாவிலிருந்து வரவழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

54. மூன்றுவது திட்டக் காலத்தில் இத் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றினாலுங்கூட, மின்சக்தி கிடைக்கும் அளவைவிட தேவையின் அளவு அதிகரித்தே இருக்கும். எனவே, மின்சார அபிவிருத்தியை முன்னிட்டு புதிய திட்டங்களை மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதை நாம் ஆராய்ந்தவண்ணமே இருக்க வேண்டும். ஹோகனகல்லில் மொத்தம் 8 லட்சம் கிலோவாட் உற்பத்தித் திறனுள்ள இரண்டு மின்சார நிலையங்களை அமைக்க முடியுமெனப் பூர்வாங்கப் பரிசீலனையிலிருந்து தெரிய வருகிறது. இத் திட்டத்துக்கு ரூ 58 கோடி செலவாகும். இத் திட்டத்திற்கு மைசூர் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வேண்டும். அது கிடைக்குமென நம்புகிறோம். நமது மின்சாரப் பற்றுக் குறையை நிரந்தரமாகப் போக்க வேண்டுமானால், இம் மாநிலத்தில் அணுசக்தி மின்சார நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும். இதற்கு ஆவன செய்யுமாறு இந்திய அரசினரை வற்புறுத்தி வருகிறோம். அணுசக்தி நிலையம் அமைப்பதற்கு ஏற்ற இடத்தை நிச்சயிப்பதற்காக இந்திய அரசினர் உயர் தரக் குழு ஒன்றை நியமித்துள்ளனர். அதிகப்படியான மின்சாரத்தைப் பெற்று பயன் படுத்திக்கொள்ள நமது மின் இணைப்புக்கு உள்ள ஆற்றலையும், பரவலாக மின்சாரத்தைப் பல பகுதிகளுக்கும் வழங்குவதற்கு உள்ள நம்முடைய திறமையான ஏற்பாடுகளையும் மனத்திற்கொண்டு, அணுசக்தி நிலையத்தை அமைக்க தமிழ்நாட்டில் ஓர் இடத்தைத் தேர்ந்து எடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

55. கிராமங்களில் மின்சார வசதி செய்து தருவதில் நமது மாநிலமே தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. இப்பொழுது 13,638 நகரங்களிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் மின்சார வசதி உள்ளது. இம் மாநிலத்திலுள்ள எஞ்சிய கிராமங்களுக்கும் மூன்ருவது திட்டக் கால முடிவிற்குள் மின்சார வசதி ஏற்படுகின்ற முறையில் ஆண்டு ஒன்றுக்கு 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு வழிவகை செய்திருக்கிருேம். 1951-ம் ஆண்டில், இந்த மாநிலத்தில் மின்சார உபயோகம் தலைக்கு சராசரி 12 யூனிட்டுகளாய் இருந்தது. இது இப்பொழுது 62 யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. மின்சார அபிவிருத்தியில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு இதுவே சிறந்த சான்ருகும்.

போக்கு வரத்து.

56. தொழில் வளர்ச்சி காரணமாகப் போக்குவரத்துத் துறையில் பல பிரச்சினைகள் எழுகின்றன. எனவே, தொழில் வளர்ச்சிக்கேற்ப நம்முடைய போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். நம்முடைய மாநிலத்தில் மொத்தம் 25,865 மைல் கொண்ட நல்ல சாலை அமைப்பு இருக்கிறது. சதுர மைலுக்கு சராசரி 0.5 மைல் சாலை நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது. இந்தியாவின் சராசரி சதுர மைலுக்கு 0.26 மைல்தான். எனவே, ஏறக்குறைய தேசீய சராசரியைப் போல் இரண்டு மடங்கு சாலை வசதிகள் நம்முடைய மாநிலத்தில் அமைந்து உள்ளன. போக்குவரத்து வசதிகளை மேலும் பெருக்குவதற்காக 9 கோடி ரூபாய் மூன்ருவது திட்டத்தில் ஒதுக்கியுள்ளோம். இதில் 1961-62-ம் ஆண்டில் 2.17 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. தவிர கிராமப் போக்குவரத்துக்களில் முக்கியமான சாலைகளைப் பராமரிப்பதற்கென பஞ்சாயத்து யூனியன்களுக்கு பெருமளவில் மானியங்கள் வழங்கி வருகிருேம். இந்த பட்ஜட்டில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஸ்தல சாலை மானியமாக வழங்குவதற்கென 1,20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம்.

57. பெரிய அளவில் தொழில்கள் வளர்ந்து வரும்பொழுது துறைமுக வசதிகளும் பெருக வேண்டும். அப்பொழுதுதான் பெரிய தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களையும், இயந்திரங்களையும் இறக்குமதி செய்வதற்கும், உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்புகள் ஏற்படும். இந்த நீண்டகாலக் குறிக்கோளைக் கருத்திற் கொண்டுதான் தூத்துக்குடியை ஒரு பெரிய ஆழ்கடல் துறைமுகமாகச் செய்ய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய சர்க்காரிடம் வலியுறுத்திச் சொல்லி

வந்திருக்கிறோம். இந்திய சர்க்காரும் இதற்கென ஒரு டிவிஷனை ஏற்படுத்தி இந்தத் திட்டத்திற்கான பூர்வாங்க வேலைகளைத் துவங்கியுள்ளார்கள். துறைமுக வசதி ஏற்படும் பொழுது தூத்துக்குடி ஒரு தொழில்மயமான பிரதேசமாகத் திகழுமென நாம் எதிர்பார்க்கிறோம். எனவே, அந்தப் பிரதேசத்தில் தொழில் வளர்ச்சியால் எழக்கூடிய பிரச்சினைகளை முன்கூட்டியே சிந்தித்து, அதற்கேற்ப நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது அவசியம். எனவே, துறைமுகத்திற்கும் தொழில்வளர்ச்சிக்கும் தேவைப்படும் நிலங்களைச் சட்டப்படி எடுத்துக் கொள்வதற்கான பிரகடனத்தை ஏற்கனவே வெளியிட்டுள்ளோம். தூத்துக்குடி பிராந்தியத்திற்காக ஒரு 'மாஸ்டர் பிளான்' தயாரிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். தூத்துக்குடி துறைமுகத்திற்கும் தொழில்வளர்ச்சிக்கும் தேவைப்படும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒரு நாளைக்கு ஒரு கோடி காலன் தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை ஆராய்ந்து வருகிறோம். தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்கு இந்திய சர்க்கார் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்றும், துறைமுக வேலையின், பல அம்சங்களும் முடிவு பெறுவதற்கான கால அட்டவணையை நிர்ணயிப்பார்கள் எனவும் நம்புகிறோம்.

58. தொழில் வளர்ச்சியைத் தொடர்ந்து வரும் பல பிரச்சினைகளை உடனுக்குடன் கவனிக்காவிட்டால் அவற்றிற்குத் தீர்வு காண்பது மிகவும் கடினமாகப் போய்விடும். எல்லாத் தொழில் பிரதேசங்களிலும் நம்மை எதிர்நோக்கியுள்ள ஒரு பெரிய பிரச்சினை வீட்டு நெருக்கடியாகும். தொழில் பெருக்கம் காரணமாக நகரங்களில் நிலங்களின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்து தொழிலாளர்கள், நடுத்தர வகுப்பினர், இவர்களுக்கான வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதில் சங்கடம் ஏற்படுகின்றது. எனவேதான் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி நகரங்களை யடுத்து பெருமளவில் நிலங்களை விலை கொடுத்து வாங்க மாநில வீட்டு வசதிக் குழு முன் வந்துள்ளது. இதன்மூலம் நியாயமான விலைக்கு எல்லா வசதிகளுடனும் கூடிய மனைக் கட்டுகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இம்மாதிரி நிலங்களை வாங்குவதற்காக நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள 1,70 லட்சம் ரூபாயைக் காட்டிலும் அதிகப் பணம் முதலீடு செய்யப்படும். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டம், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டம், வாடகை வீடு கட்டும் திட்டம் ஆகிய திட்டங்களை வீட்டு வசதிக் குழு தீவிரமாக

வீட்டு வசதி.

நிறைவேற்றி வருகிறது. இந்த ஆண்டில் 5·27 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள திட்டங்களை நிறைவேற்ற மாநில வீட்டு வசதிக் குழு முன் வந்துள்ளது ; இத் திட்டங்களுக்காக ரூ 2,64 லட்சம் வீட்டு வசதிக் குழுவிற்குக் கடனாகவும் மானிய மாகவும் வழங்க பட்ஜட்டில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்.

59. தொழில் வளர்ச்சிக்கு தொழில் அமைதி இன்றியமை யாதது. இந்தத் தொழில் அமைதியை உருவாக்குவதுதான் அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கையின் முக்கிய இலட்சியம். 1961-ம் ஆண்டில் 147 வேலை நிறுத்தங்கள் தான் ஏற்பட்டன. அதற்கு முந்திய ஆண்டில் 331 வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. வேலை நிறுத்தங்கள் காரணமாக உற்பத்தி தடைப்பட்டுப் போன காலமும் அதற்கு முந்திய ஆண்டோடு ஒப்பிடும்போது 1961-ம் ஆண்டில் நான்கில் ஒரு பங்குதான். இங்ஙனம் வேலை நிறுத்தங்கள் கணிசமாகக் குறைந்ததற்குக் காரணம் பெரும்பான்மையான தொழி லாளர் சங்கங்களும் தொழிலதிபர்களும் தங்களுக்கென ஒரு ஒழுக்க முறையை (Code of Discipline) வகுத்துக் கொண்டு அதைக் கடைப் பிடித்ததுதான். இதற்காக எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிலதிபர்களும் காண்பித்த பொறுப்புணர்ச்சிக்காக அவர்களுக்கு என் னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். தொழிலாளர்களுக்கான இன்ஷ்யூரன்ஸ் திட்டம் மேலும் ஐந்து இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. 2.21 லட்சம் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். திண்டுக்கல், திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய இடங்களுக்கு இந்தத் திட்டம் அண்மையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 20 இடங்களிலே, 12 இடங்களில் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் 27 லட்சம் ரூபாய் செலவில் 175 படுக்கை வசதிகளுடன் அலுவலர்களுக்கு ஜாகை வசதிகளுடனும் கூடிய ஒரு தனி இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், 158 படுக்கை வசதி களுடன் கூடிய மாடிக் கட்டிடம் 11 லட்சம் ரூபாய் செலவில் உருவாகிக் கொண்டிருக்கிறது. மதுரையில் இருக்கும் தற்போதைய தொத்து நோய் ஆஸ்பத்திரியை 220 படுக்கை வசதிகளடங்கிய தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்பத்திரி யாக மாற்றி அமைப்பதென அரசினர் முடிவு செய்திருக் கின்றனர். கோவை நகரை அடுத்துள்ள உப்பிலிப்பாளை

யத்தில் 270 படுக்கை வசதியுள்ள ஒரு தொழிலாளர் இன்ஷூரன்ஸ் ஆஸ்பத்திரியை நிறுவுவதற்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது ; அதற்கான நில ஆர்ஜித நடவடிக்கைகள் முன்னேறி வருகின்றன.

60. நம்முடைய திட்டங்களின் நோக்கம் பொருளாதார வளர்ச்சி மாத்திரமல்ல ; மக்களுடைய நல்வாழ்விற்கு அடிகோலுவதும்தான். பெரும்பான்மையான மக்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிற ஒரு நாட்டில் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களைப் பெருமளவில் நிறைவேற்றினால்தான் மக்கள் நலம் பெற வாழ முடியும் தவிர, பொருளாதாரத் துறையில் முன்னேற்றத்திற்கும்கூட கல்வித் துறையில் முன்னேற்றம் இன்றியமையாதது. கல்வி மூலம் சமுதாயத்தின் பொதுத் திறனை உயர்த்தினால்தான் விஞ்ஞானத்திலும், தொழிலியலிலும் இன்று உலகில் காண்கின்ற பெருமளவு முன்னேற்றங்களின் முழுப் பயனையும் நம் மக்கள் அடைய முடியும். எனவேதான், நாம் கல்வி வளர்ச்சிக்கு, முக்கியமாக ஆரம்பக் கல்விக்கு நம்முடைய திட்டங்களில் முக்கியயத்துவம் கொடுத்திருக்கிறோம். கடந்த ஏழு-எட்டு ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் ஆரம்பக் கல்வியின் மகத்தான வளர்ச்சியை கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவங்கியபோது 16,000 ஆரம்ப பள்ளிக்கூடங்கள்தான் இருந்தன. இன்று 28,000 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய முன்னேற்றம் இன்னும் தெளிவாகப் புலப்படும். முதல் திட்டம் ஆரம்பித்தபோது, 6 வயதிலிருந்து 11 வயதிற்குட்பட்ட மாணவர் 18.5 லட்சம் பேர் துவக்கப் பள்ளிகளில் இருந்தார்கள் ; இன்று 39.3 லட்சம் மாணவ, மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். ஆறு வயதிலிருந்து 11 வயதிற்குட்பட்ட மாணவர்களில் 94 சத வீதத்தினரை பள்ளிகளில் சேர்த்து விட்டோம். மாணவிகளில் பள்ளி செல்லும் வயதினரில் 32.5 சத வீதத்தினரே 1951-52-ல் கல்வி பயின்றனர். இன்று 57 சத வீதத்தினர் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். ஆறு வயதிலிருந்து 11 வயதிற்குட்பட்ட எல்லாச் சிறுவர், சிறுமிகளையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் பள்ளிக்கூடங்களில் சேர்க்க வேண்டுமென்ற நமது மாபெரும் இலட்சியத்தை குறிப்பிட்ட காலவரையறைக்கு முன்பே அடைந்து விடுவோம் என்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. மக்களிடையே இன்று விழிப்பு ஏற்பட்டிருக்கிறது ; கல்வியின் பெருமையை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள், இந்த இரண்டு

காரணங்களைத் தவிர, நம்முடைய மதிய உணவுத் திட்டத்தினால்தான் குழந்தைகள் இத்துணை பெருமளவில் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்தினால் பள்ளிக் குழந்தைகளில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கினர் பயனடைகின்றனர். இந்தத் திட்டம் இன்னும் சீரிய முறையில் செயலாற்றப்பட வேண்டுமென்ற குறிக்கோளுடன் இந்தத் திட்டத்தைக் கிராம அளவில் நிறைவேற்றும் பொறுப்பை பஞ்சாயத்துத் தலைவர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். இங்ஙனம் மக்களுடைய பிரதிநிதிகளை இத்திட்டத்துடன் இணைத்ததன் மூலம் இந்தத் திட்டம் இன்னும் பயனுள்ள முறையில் இயங்கும்; ஊராருடைய ஒத்துழைப்பு, நன்கொடைகள் மூலம் இன்னும் விரிவான முறையில் நடக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

61. மதிய உணவின் தரத்தை உயர்த்துவதற்கும் நமக்கு அமெரிக்காவில் உள்ள 'கேர்' (CARE) என்ற ஸ்தாபனத்திலிருந்து அரிசி, கோதுமை, பால் பவுடர், தாவர எண்ணெய் போன்ற மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் உதவியாகக் கிடைத்திருக்கின்றன. 'கேர்' ஸ்தாபனத்தார் அளித்திருக்கும் இந்த உதவிக்கு நம்முடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வோமாக. இந்த உதவி வருகின்ற ஆண்டுகளிலும் தொடர்ந்து கிடைக்குமென நம்புவதற்கு அறிகுறிகள் இருக்கின்றன.

62. ஆரம்பக் கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக உயர்தர ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்ற கோரிக்கைகளும் அதிகரித்திருக்கின்றன. உயர்தரப் பள்ளி இறுதிவரை நாம் எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசக் கல்வி வழங்கியிருப்பதால் இன்னும் அதிகமான உயர்தர ஆரம்பப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் தேவைப்படுகின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களை நாம் ஏற்படுத்திக் கொடுத்தாலொழிய, ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகையின் முழு பயனும் கிடைக்காது. இந்தக் கருத்தை மனத்திற் கொண்டுதான் 1961-62-ம் ஆண்டில் மாத்திரம் 1,461 உயர்தர ஆரம்பப் பள்ளிகளையும், உயர் ஆதாரப் பள்ளிகளையும் நிறுவினோம். கடந்த ஆண்டின் முடிவில் இருந்த உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 4,500. அதேபோன்று 272 உயர்நிலைப் பள்ளிகளை அமைத்துக் கொடுத்தோம். அதுவும் போதவில்லையென்று நடைமுறை ஆண்டில் இதுவரை மேலும் 192 உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். நான் கல்வி இலாகா பொறுப்பை ஏற்ற பிறகு பெண்களிடையே இன்னும் கல்வியைப்

பரவலாகச் செய்வதற்கு விசேஷ முயற்சிகள் தேவையென்று எனக்குத் தோன்றியது. அதுவும் முக்கியமாக பெண்களுக்கென தனி உயர்நிலைப் பள்ளிகள் இன்னும் அதிகம் வேண்டும் என்று பட்டது. எனவே, இந்த ஆண்டு அங்கீகாரம் கொடுத்திருக்கிற 192 உயர்நிலைப் பள்ளிகளில், 39 உயர்நிலைப் பள்ளிகள் பெண்களுக்கென தனி பள்ளிகள்.

63. கல்லூரி நிலைக் கல்வியிலும் நம் மாநிலம் கடந்த சில ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியடைந்திருந்து இப்பொழுது மாணவர்களுக்கென 43 கல்லூரிகளும், மகளிர்க்கென 16 கல்லூரிகளும் இருக்கின்றன. உதகமண்டலத்தில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிக்காக 5 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டுவதாகத் தீர்மானித்து, நடைமுறை ஆண்டில் செலவிற்காக இந்த பட்ஜட்டில் ஒரு லட்சம் ரூபாய் பணமும் ஒதுக்கியிருக்கிறோம். சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் 4 லட்சம் ரூபாய் செலவில் மாணவர் விடுதி கட்டுவதற்காகவும், புதுக்கோட்டைக் கல்லூரியில் மாணவர் விடுதிக்கு கட்டிட விஸ்தரிப்பிற்கு சுமார் ஒரு லட்சமும் ஒதுக்கியிருக்கிறோம்.

64. கல்வி வசதிகளை விஸ்தரித்தால் மாத்திரம் போதாது. உண்மையாகவே எல்லோர்க்கும் சம வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்றால், கல்வி வசதிகளை ஏழை மக்களும் பயன்படுத்திக்கொள்ளும் நிலையை நாம் உருவாக்க வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் ஆண்டுக்கு 1,200 ரூபாய்க்குக் குறைவான வருவாயுள்ள எல்லா பெற்றோர்களுடைய குழந்தைகளுக்கும் உயர்நிலைப் பள்ளி இறுதிவரை இலவசக் கல்விச் சலுகைத் திட்டத்தை அரசாங்கம் தீட்டியது. இந்தத் திட்டம் அமுலானதிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளில் சேரும் ஏழை மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்திருக்கிறது. இப்பொழுது உயர்நிலைப் பள்ளி இறுதிவரை இலவசக் கல்விச் சலுகைக்கான ஆண்டு வருவாய் எல்லையை சமூகத்தின் எல்லா பிரிவினர்க்கும் ரூபாய் 1,200 லிருந்து ரூபாய் 1,500 ஆக உயர்த்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்பதை இந்தச் சபையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

65. கல்வி வளர்ச்சிக்கென இன்று நாம் ரூபாய் 2.5 கோடி செலவு செய்கிறோம்; கல்விபோன்ற ஆக்க வேலைகள் முன்பு இருந்ததைப்போல் இன்று பன்மடங்கு வளர்ச்சியடைந்திருப்பதனால்தான், நம்முடைய வரவைக் காட்டிலும் செலவு அதிகமாகி, நிதி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆனால்,

இதைக் காரணமாகக்கொண்டு ஆக்க வேலைகளின் வேகத்தைக் குறைத்துக்கொள்ள முடியாது; குறைத்துக் கொள்ளவும் கூடாது. அதற்கு மாறாக ஆக்க வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கான நிதிவசதிகளைப் பெருக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

மருத்துவ வசதிகள்.

66. திட்டக் காலத்தில் மருத்துவ சுகாதார வசதிகளும் பெருகியிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு பிரதம சுகாதார நிலையத்தை ஏற்படுத்துவது நமது இலட்சியம். 1962-63-ம் ஆண்டில் 40 பிரதம சுகாதார நிலையங்களை நிறுவுவதாக முடிவுசெய்து, அதற்காக 13·02 லட்சம் ரூபாய் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள மருத்துவ நிலையங்களையும் ஆஸ்பத்திரிகளையும் அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்ற வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. சென்னை நகரில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி அதிகமாயுள்ளது. நாளடைவில் தென் சென்னையில் மற்றொரு ஆஸ்பத்திரி அமைப்பது அவசியமாகுமென சிறிது காலமாகவே அரசாங்கம் நினைத்து வந்திருக்கிறது. எனவே, இத் திட்டத்தின் முதற்படியாக, கோடம்பாக்கம் புதூரில், பின்னால் தென் சென்னைக்கென ஜெனரல் ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டுவதற்கு 30 ஏக்கர் நிலம் ஒதுக்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தேவகோட்டையிலிருக்கும் மருந்தகத்தை, மருத்துவ மனை நிலைக்கு உயர்த்துவதற்கு ஆவன செய்யப்படும். அதற்கென கட்டிடங்கள் கட்டுவதற்கு 6·59 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அரந்தாங்கியில் உள்ள மருந்தகத்தை, தாலூகா தலைமை ஆஸ்பத்திரியாக உயர்த்துவதற்கும் இந்த பட்ஜட்டில் பணம் ஒதுக்கியுள்ளோம். மற்றும் போடிநாயக்கனூர், கொளச்சல் ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும், சிவகங்கை ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே பகுதி கட்டுவதற்கும் இந்த பட்ஜட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரியில் எலும்பு முறிவு சிகிச்சைக்கான புதிய விடுதியைக் கட்டுவதற்காக அடையாள பூர்வமாகப் பணம் ஒதுக்கப் பட்டுள்ளது. கட்டிட வேலைக்கான மதிப்பீடுகள் தயாரானதும், இந்தப் பணம் போதிய அளவிற்கு உயர்த்தப்படும்.

பின் தங்கிய வகுப்பினரின் நலன்.

67. பின்தங்கிய வகுப்பினரின் நலத்தில் அரசாங்கம் தொடர்ந்து விசேஷ அக்கறை காட்டுகிறது. ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர் இவர்களின் நலனுக்கான திட்டங்களுக்கு இந்தப் பட்ஜட்டில் 3,56 லட்சம் ரூபாய் நிதி வழங்கியிருக்கிறோம். தொழில் நுட்பக் கல்வி, சாதாரணக் கல்வி

இரண்டு துறைகளிலும் உபகாரச் சம்பளங்கள் வழங்கும் திட்டங்கள் தொடர்ந்து அமுலாகும் ; நடைமுறை ஆண்டில் கொஞ்சம் பணம் அதிகமாகவே ஒதுக்கியிருக்கிறோம். சர்க்கார் மாணவர் விடுதிகளில் உணவிற்கென ஒதுக்கப் பெறும் தொகை விகிதத்தை அதிகரித்திருக்கின்றோம் ; அதேபோன்று மானியம் பெறுகின்ற மாணவர் விடுதிகளுக்கு மானிய விகிதத்தையும் உயர்த்தியிருக்கிறோம்.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னேற்றம்

68. பல்வேறு அபிவிருத்தித் துறைகளில் செயல்படுகின்ற வேலைத் திட்டங்களைப்பற்றி நான் இதுகாறும் தந்துள்ள விவரங்களை மனதிற்கொண்டு பரிசீலிக்கும்போது, திட்டத்தை நிறைவேற்றுவதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் நன்கு உணர முடியும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்தில் 2,91 கோடி ரூபாய் செலவிடுவதாக நிர்ணயித்துள்ளது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இதில் திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1961-62-ம் ஆண்டில் 50·44 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. நடப்பு ஆண்டின் பட்ஜட்டில் 1962-63-ம் ஆண்டுக்காக திட்ட வேலைகளுக்காகவென 57.27 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. திட்டத்தின் இரண்டாவது ஆண்டு இறுதிக்குள் நம் திட்டத்தில் 107.71 கோடி ரூபாய் செலவு செய்து முடித்திருப்போம். அதாவது திட்டத்தின் மொத்த முதலீட்டில் 37 சத வீதத்தை நாம் பயன்படுத்திக் கொண்டிருப்போம். எனவே, திட்டம் நிர்ணயித்தபடி நிறைவேறி வருவதைப்பற்றி அறிய கனம் அங்கத்தினர்கள் திருப்தி கொள்ளுவார்கள். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருக்கின்ற பல்வேறு வேலைத் திட்டங்களுக்கென பணம் ஒதுக்கியிருக்கின்ற விவரங்களை '' மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—1962-63-ல் திட்ட வேலைகள் '' என்ற விசேஷ வெளியீட்டில் காணலாம். இந்த வெளியீடு மற்ற பட்ஜட் பிரசுரங்களுடன் அங்கத்தினர்களுக்குத் தரப் பட்டிருக்கிறது.

திட்டத்திலில்லா வேலைகள்—அரசாங்க ஊழியர்களின் அகவிலைப் படி உயர்வு.

69. இத்துணை பெரிய திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்றுல், நாம் நம்முடைய நிதி வசதிகள் முழுவதையும் திரட்ட வேண்டும். அது மாத்திரமல்ல ; திட்டத்தில் இல்லாத வேலைகளுக்கான செலவை எவ்வளவு தூரம்குறைக்க வேண்டுமோ, அந்த அளவிற்குச் சுருக்கிக் கொள்ள வேண்டும். இங்ஙனம் நம்முடைய நிதி ஆதாரங்கள் முழுவதையும் திரட்டி திட்டத்தை நிறைவேற்ற முயன்று வருகிறோம். இருப்பினும், சில சந்தர்ப்பங்களில், திட்டத்தை

தயாரித்தபோது நாம் எதிர்பார்க்காத செலவினங்களைப் பின்னர் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மூன்று வது ஐந்தாண்டு திட்டம் தொடங்குமுன் நம் சம்பளக் கமிஷனின் சிபார்சுகளையொட்டி பலதரப்பட்ட அரசாங்க ஊழியர்களுடைய சம்பள விகிதங்களை வெகுவாக உயர்த்தியது அங்கத்தினர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்த பொதுச் சம்பள விகித உயர்வுத்திட்டத்தின் ஓர் அம்சமாக மாநில அரசாங்க ஊழியர்களுடைய அகவிலைப்படியை, மத்திய அரசாங்க ஊழியர்களுடைய அகவிலைப்படிக்கு ஒப்ப மாற்றியமைத்தோம். கடந்த ஏப்ரல் மாதம் மத்திய அரசாங்கம் தங்களுடைய ஊழியர்களுடைய அகவிலைப்படியை உயர்த்தியிருக்கிறார்கள். இது மாநில அரசாங்கம் கவனிக்க வேண்டிய ஒரு புது சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது. மத்திய அரசாங்கம் 150 ரூபாய்க்குக் குறைவாய் சம்பளம் உள்ள ஊழியர்களுக்கு 5 ரூபாயும், ரூபாய் 150-லிருந்து ரூபாய் 300 வரை சம்பளம் உள்ள ஊழியர்களுக்கு ரூபாய் 10-ம் அதிகமாக அகவிலைப்படியாகக் கொடுத்திருக்கிறார்கள். அகவிலைப்படிக்கு அருகதை வரம்பை ரூபாய் 320-லிருந்து ரூபாய் 400 ஆகவும் உயர்த்திருக்கிறார்கள். நம்முடைய அகவிலைப்படிக்கும் மத்திய அரசாங்கத்தின் அகவிலைப் படிக்கும் மீண்டும் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. நம் முடைய ஊழியர்களுடைய அகவிலைப்படியை அவர்களுக்குச் சமமான மத்திய அரசாங்க ஊழியர்களுடைய அகவிலைப்படி கொப்ப உயர்த்த வேண்டுமா என்பதை நாங்கள் நன்றாகப் பரிசீலித்துப் பார்த்தோம். மத்திய அரசாங்கத்திற்கொப்ப நம்முடைய அகவிலைப்படி விகிதங்களை உயர்த்தினால், ஆண்டு தோறும் மூன்று கோடி ரூபாய் அதிகம் செலவாகும். அதன் காரணமாக மூன்றுவது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதி வசதிகள் பெரிதும் பாதிக்கப்படும். நான் முன்பே தந்துள்ள வரவு-செலவு புள்ளி விவரங்களிலிருந்து நம் முடைய ரெவின்யூ கணக்கு இவ்வளவு பெரிய செலவைத் தாங்க இயலாது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர் வார்கள். ஆனால், அரசாங்கத்திற்கு தங்களுடைய ஊழியர் களின் கஷ்டங்கள் நன்றாகத்தெரியும். எனவே, தங்களுடைய கஷ்டமான நிதி நிலையிலும், தங்களுடைய ஊழியர்களில் பெரும் பகுதியினருக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளனர். எனவே, 150 ரூபாய்க்குக் குறை வாகப் பெறும் எல்லா அரசாங்க ஊழியர்களுடைய அகவிலைப் படியையும் ரூபாய் பத்திலிருந்து ரூபாய் பதினைந்தாக உயர்த்துவதென உத்தேசித்துள்ளேன். இந்த அகவிலைப்படி உயர்வு ஆகஸ்ட் 1-ம் தேதி தரப்பட வேண்டிய ஜூலை மாதச் சம்பளத்திலிருந்து அமுலுக்கு வரும். எல்லா

ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் பள்ளிஆசிரியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் ரூபாய் 150-க்குக் குறைவாகப் பெறுவோர்க்கு அரசாங்க ஊழியர்களைப் போன்று அகவிலைப்படி உயர்வு தரும்படி அரசாங்கம் சிபார்சு செய்யும் ; அதிக அகவிலைப்படி கொடுப்பதனல் ஸ்தல ஸ்தாபனங்களின் பட்ஜட்டில் ஏற்படும் பற்ருக்குறையை ஈடுகட்ட அரசாங்கம் மானியம் வழங்கும். மேற்கூறிய எல்லா வகை ஊழியர்களுக்கும் அகவிலைப்படியளிப்பதால் நடப்பு ஆண்டில் 1·7 கோடி ரூபாய் அதிகம் செலவாகும். முழு ஆண்டில் 2·6 கோடி ரூபாய் அதிகம் செலவாகும். இப்போதுள்ள நிதிப் பற்ருக்குறை காரணமாக 150 ரூபாயும் அதற்கு மேலும் பெறும் அரசாங்கஊழியர்கள், ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் இவர்களுடைய அகவிலைப் படியை உயர்த்தும் பிரச்சினையை நிதி வசதிகள் பெருகும் வரை ஒத்திப்போடவேண்டுமென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

70. இப்பொழுது பட்ஜட்டின் பல விவரங்களையும் நன்கு உணரக்கூடிய நிலையில் இருக்கிறேம். 1960-61-ம் நிதி ஆண்டு ரெவின்யூகணக்கில் 94 லட்சம் ரூபாய் உபரியுடனும், 10·15 கோடி ரூபாய் ரொக்கக் கையிருப்புடனும் முடிவுற்றது. கடந்த சில ஆண்டுகளாகவே ரெவின்யூ கணக்கில் செலவிற்கு மேல் சிறிது அதிகமாகவே வரவு இருந்திருக்கிறது. ஆனல், மூன்ருவது திட்டத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக அதிகம் செலவழிப்பதாலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நாம் புதிதாக ஆரம்பித்த பல க்ஷேம நலத் திட்டங்களையும் தொடர்ந்து நடத்த வேண்டியிருப்பதாலும் நம்முடைய நிதி பற்ருக்குறையை உணர ஆரம்பித் திருக்கிறேம். 1961-62-ம் ஆண்டின் இறுதிக் கணக்கைப் பற்றிய விவரங்கள் நமக்குக் கிடைக்க இன்னும் கொஞ்சம் காலம் ஆகும். இருப்பினும் கணக்கில் ஏற்படக்கூடிய எல்லா மாற்றங்களையும் மனதிற்கொண்டு பார்க்கும்போது சென்ற ஆண்டு திருத்திய மதிப்பீட்டின்போது ரெவின்யூக் கணக்கில் 6·96 கோடி ரூபாய் ' துண்டு ' விழும் என்று எதிர்பார்த்ததற்கு மாருக 8·5 கோடி ரூபாய் துண்டு விழும் என இப்பொழுது மதிப்பிடப்படுகிறது. 1961-62-ம் ஆண்டு முடிவில் நாம் ரிசர்வ் பாங்கிலிருந்து பெற்ற 1,39 லட்சம் ரூபாய் வழிவகைக் கடனையும் சேர்த்து நம்முடைய ரொக்கக் கையிருப்பு ரூபாய் 2,44 லட்சம். 1961-62-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ஆண்டுமுடிவில் 4,29 லட்சம் ரூபாய் கையிருப்பு இருக்குமென எதிர்பார்த்தோம். ஆனல், இந்திய அரசாங்கத்திடமிருந்து நம்முடைய திட்டத்திற்

1961–62 ஆண்டின் பூர்வாங்கக் கணக்குகள்.

காக வர வேண்டிய உதவிப் பணம் முழுவதையும் நிதி ஆண்டு முடிவிற்குள் பெற முடியவில்லை. எனவே, மார்ச் மாதத்தில் ரிசர்வ் பாங்கியிலிருந்து வழிவகைக் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நடப்பு ஆண்டிலும் நாம் நம்முடைய வழி வகைநிலையைத் தொடர்ந்து கவனிக்க வேண்டிய அவசியமிருக்கிறது.

71. பூர்வாங்கக் கணக்குகளிலிருந்து, மாநில அரசிற்குரிய வரிகளிலிருந்து எதிர்பார்த்ததைவிட அதிக வருவாய் கிடைத்ததாகத் தென்படுகிறது; ஆனால், அதே சமயத்தில் கல்வி, மருத்துவம், பொதுப்பணி முதலிய துறைகளில் செலவு மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகம் செலவானதாகத் தெரிய வருகிறது. கல்வித் துறையில் மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகமாக ஆரம்பக் கல்வி மானியங்களாகவும், மதிய உணவுத் திட்ட மானியங்களாகவும் செலவழிக்க நேர்ந்தது.

1962-63 ஆண்டின் பட்ஜட்.

72. அபிவிருத்தி வேலைகளின் தேவைகளும், கிராக்கிப்படி உயர்வினால் ஏற்படும் செலவதிகரிப்பும் சேர்ந்து 1962-63-ம் ஆண்டின் செலவின மதிப்பீடுகளில் பிரதிபலிக்கின்றன. ரெவின்யூ கணக்கில் எதிர்பார்க்கும் வரவு ரூ 106·50 கோடி; எதிர்பார்க்கும் செலவு ரூ 116·01 கோடி. இதன் காரணமாகத் துண்டு விழும் தொகை ரூ 9.51 கோடி. நாம் முன்னமேயே குறிப்பிட்ட கணக்கு முறைகளில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக, வரவு செலவு இரண்டு பகுதிகளையும் 8,19 லட்சம் ரூபாய் அளவிற்கு மிகைப்படுத்தி காண்பிக்கிறது அதுபோக வரவில் 5,60 லட்சம் ரூபாயும், செலவில் 8,15 லட்சம் ரூபாயும் உண்மையில் கூடுதலாகச் செலவாகியிருக்கிறது. இப்பொழுது, நம் முன்னுள்ள கூடுதலான புள்ளி விவரங்களின் அடிப்படையில், இடைக்கால பட்ஜட்டில் காட்டியதைவிட இந்த பட்ஜட்டில் சரியாக மதிப்பீடுகளைக் காண்பித்திருக்கிறோம். ரெவின்யூ கணக்கில் 79 லட்சம் ரூபாய் அளவிலும், முதலீடு, கடன் கணக்குகளில் 1,31 லட்சம் ரூபாய் அளவிலும் செலவாகக்கூடிய 168 புதிய வேலைத்திட்டங்களையும் இந்த பட்ஜட்டில் சேர்த்திருக்கிறோம்.

73. வரவினங்களை மதிப்பிடுவதில் நிதி கமிஷனின் சிபார்சுகளையும் மத்திய அரசாங்கத்திலிருந்து பங்கிட்டு கொடுக்கும் வரிகளிலிருந்து அதிகமாக கிடைக்கக்கூடிய பணத்தையும் மனதிற் கொண்டுள்ளோம். இதன் காரணமாக ரெவின்யூ கணக்கில் 2,10 லட்சம் அபிவிருத்தி ஏற்படுகிறது. நம்முடைய வரிகளிலிருந்து அதிக வருவாய் கிடைக்கக்கூடியதையும் கணக்கில் சேர்த்துக்கொண்டிருக்கிறோம். செலவினங்

களில், புதிய கிணறு வெட்டு மானியத் திட்டம் எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் விஸ்தரிக்கப்படுவதால் ஏற்படும் அதிகச் செலவை "பொது நிர்வாகம்" என்ற கணக்கு தலைப்பின்கீழ் காண்பித்திருக்கிறோம். "பிரதேச செஸ் உபரிவரி" ஈட்டு மானியத்திற்காக இடைக்கால பட்ஜட்டில் 1,00 லட்சம் ரூபாய் ஒதுக்கியதற்கு பதிலாக இப்பொழுது 1,21 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சென்ற ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 60 லட்சம்தான் ஒதுக்கியிருந்தோம். கல்விக்கான செலவின் மதிப்பீடு, இடைக்கால பட்ஜட்டில் ரூ.23·35 கோடியாக இருந்ததை ரூ 25.18 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். கல்வியின் பெரிய வளர்ச்சிக்கு இது ஒரு அறிகுறி. இடைக்கால பட்ஜட்டில், ஆரம்பகல்வி மானியமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கும் தொகையை ரூ $8\frac{1}{2}$ கோடி என்று மதிப்பிட்டிருந்தோம்; அதையும் இப்பொழுது ரூ 9·87 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். மதிய உணவு திட்டத்திற்காக, இடைக்கால பட்ஜட்டிலிருந்தது போலவே 1·35 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். பல புதிய வேலைத் திட்டங்களையும் கடந்த ஆண்டில் மேற்கொண்டதால், மருத்துவத்திற்கும் நம்முடைய மதிப்பீடுகளை உயர்த்த வேண்டியிருக்கிறது.

74. இடைக்கால பட்ஜட்டைக் காட்டிலும் முதலீட்டு செலவிற்கும் அதிக பணம் ஒதுக்கியிருக்கிறோம். இடைக்கால பட்ஜட்டில் காட்டிய 17 கோடி ரூபாய்க்கு மாறாக, தற்பொழுது முதலீட்டுச் செலவு 19 கோடி ரூபாயாக இருக்கும். விசேஷ சிறு பாசன திட்டத்திற்காக இடைக்கால பட்ஜட்டில் ரூ 1,50 லட்சம் ஒதுக்கியிருந்ததையும் ரூ 1,71 லட்சமாக உயர்த்தியிருக்கிறோம். சென்னை நகரமன்றத்திற்கு கடனுதவிக்காக அதிக பணம் ஒதுக்கியிருக்கிறோம்; குடிதண்ணீர், சாக்கடை வசதித் திட்டங்களுக்காகத் தேவைப்படும் குழாய்களை வாங்குவதற்கு ரூ 50 லட்சம் முன் பணமாகக் கொடுக்கவும் பட்ஜட்டில் வழிவகை செய்திருக்கிறோம். மின்சாரக் குழுவின் முதலீட்டுச் செலவு, இடைக்கால பட்ஜட்டில் நிர்ணயித்ததுபோல் ரூ 18·50 கோடியாகவிருக்கும். ஆனால் மின்சாரக் குழுவிற்கு அரசாங்கத்திலிருந்து 9 கோடி ரூபாய்தான் கடனாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். ஏனெனில், மின்சாரக் குழு வெளிமார்க்கெட்டிலிருந்து 2 கோடி ரூபாய் பொதுக் கடனாகப் பெறலாம் என்று இடைக்கால பட்ஜட்டின்போது எதிர்பார்த்ததற்கு மாறாக, இப்பொழுது 3 கோடி ரூபாய் கடன் சேகரிக்கலாம் என எதிர்பார்க்கிறோம். மாநில முதலீட்டுச் செலவு.

அரசாங்கம் இந்த ஆண்டில் மார்க்கெட்டில் 10 கோடி ரூபாய் பொதுக் கடனுகப் பெற முடியும் என நிர்ணயித்து, கணக்கில் வரவு வைத்துக் கொண்டிருக்கிறேன்.

அதிக நிதி வசதிகளுக்கான தேவை.

75. நான் முன்பே கூறியதுபோல், சமீப காலங்களில் இருந்ததைவிட, நம்முடைய வழிவகை நிலை (Ways and Means Position) இப்பொழுது கஷ்டமாகவிருக்கிறது. ரெவின்யூ கணக்கிலும் 9,51 லட்சம் ரூபாய் பற்ருக்குறை இருக்கிறது. இந்த அளவிற்கு ஏற்படும் பற்ருக்குறையை நாம் அலட்சியமாகக் கருதமுடியாது ; அப்படிச் செய்தால் நம்முடைய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான சக்தி பாதிக்கப்படும். நம்முடைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களைக் குறைத்துக் கொண்டு வரவையும் செலவையும் ஈடுகட்டவேண்டுமென்பது குறுகிய மனப்பான்மையைக் காட்டுவதாகும். ஏனெனில் அப்படிச் செய்வதன் மூலம் நம்முடைய பொருளாதாரம் வளர்ச்சியுறுவதற்கான நீண்ட கால வாய்ப்புகளுக்குக் குந்தகம் விளைவிப்போம். நம்முடைய சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்கள் இப்பொழுதுதான் தங்கள் நல்வாழ்விற்கான அறிகுறிகளைக் காண ஆரம்பத்திருக்கின்றனர். இந் நிலையில் நம்முடைய செலவுத் தொகையில் பெருமளவிற்குக் காரணமான கல்வி, மருத்துவ வசதி, சுகாதார வசதி, கிராம அபிவிருத்தி ஆகிய வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கும் பணத்தைக் குறைக்க முடியாது. ஆகவே யாதொரு தடையுமின்றி நம்முடைய அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேறுகிற வகையில் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதுதான் சரியான வழியாகும். எனவே, அரசாங்கத்தின் கீழ்க்கண்ட அதிக வரி விதிப்பிற்கான யோசனைகளைச் சபையின்முன் வைக்கின்றேன். வேறுவிதமாக நிர்ணயிக்கப்பட்டாலொழிய இந்த வரிகள் எல்லாம் ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

பஸ்கள், போக்குவரத்து மோட்டார் வண்டிகள்மீது வரிகள்.

76. அரசாங்கத்தின் முதல் வரி விதிப்புத் திட்டம் தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டத்தின் (Madras Motor Vehicles Taxation Act) கீழும், தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (பிரயாணிகளுக்கும் சரக்குகளுக்கும் வரி விதிப்பது பற்றிய) சட்டத்தின் [Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act] கீழும் பிரயாண பஸ்களுக்கும், லாரி போன்ற பொதுப் போக்குவரத்து வண்டிகளுக்கும் உள்ள வரி விதிப்பை அதிகரிப்பதுதான். இப்பொழுது 1931-ம் வருஷத்திய தமிழ்

நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் பொதுவாக சென்னை நகரிலும், மற்ற குறிப்பிடப்பட்ட முனிசிபல் நகரங்களிலும் இயங்கும் பஸ்கள் ஒரு பிரயாணி இடத்திற்கு காலாண்டிற்கு 23 ரூபாயும், மற்ற இடங்களில் 30 ரூபாயும் வரி கொடுக்கின்றன. இப்பொழுதுள்ள வரி விதிப்பு முறை பஸ்கள் ஓடுகின்ற தினசரி மைலின் அடிப் படையில் அமையவில்லை. எனவே, அதிகம் மைல்கள் ஓடுகின்ற பஸ்களுக்குக் கிடைக்கின்ற அதிக இலாபத்திற் கொப்ப வரி விதிப்பு அமையவில்லை. எனவே, பிரயாணி பஸ்களை அவைகள் ஓடும் தினசரி மைலுக்கேற்ப பாகுபாடு செய்து, ஒவ்வொரு படிக்கும் (Slab) தனியே அதிகரித்த வரி விதிப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். இதன்படி 132 மைல்கள் வரை தினசரி ஓடும் பஸ்களுக்கு இப்பொழு துள்ள வரியைக் காட்டிலும் பிரயாணி இடத்திற்கு (Passenger seat) காலாண்டிற்கு ஐந்து ரூபாயும், 132 மைலிலிருந்து 169 மைல் வரை உள்ள பஸ்களுக்கு பிரயாணி இடத்திற்குக் காலாண்டிற்கு பத்து ரூபாயும், 170 மைலுக்கு மேல் உள்ள பஸ்களுக்கு பிரயாணி இடத்திற்கு காலாண்டிற்கு பதினைந்து ரூபாயும் அதிகம் வரி விதிப்பது என உத்தேசிக்கப் பட்டுள்ளது. இப்பொழுது அமுலுக்கு வந்துள்ள மெட்ரிக் முறை பிரகாரம் புதிய வரி விகிதங்கள் கீழ்க்கண்ட படியிருக்கும் :—

பஸ்கள் தினசரி ஓடும் மைல்கள்.	ஒரு பிரயாணி இடத்திற்கு காலாண்டிற்கு வரி.	
	சென்னையும் குறிப்பிடப் பட்ட நகரங்களும்.	மற்ற இடங்கள்.
	ரூ	ரூ
210 கிலோ மீட்டர் வரை.	28	35
210-லிருந்து 270 கிலோ மீட்டர் வரை.	33	40
270-ற்கு மேற்பட்ட கிலோ மீட்டர்கள்.	38	45

இந்த அதிகரிப்பு நிற்கும் பிரயாணிகளுக்காக செலுத்தும் வரி விகிதங்களை பாதிக்காது.

77. அதேபோன்றுமோட்டார் வண்டிகள் பிரயாணிகளுக் கும் சரக்குகளுக்கும் வரி விதிப்பதைப்பற்றிய சட்டத்தின்கீழ் பஸ் முதலாளிகளிடம் இப்பொழுது பிரயாணக் கட்டணத் தில் ரூபாய்க்கு 5 நயா பைசா வரியாக வசூலிக்கப்படுகிறது. இந்த வரி இப்பொழுது ரூபாய்க்கு 10 நயா பைசாவாக உயர்த்தப்படும். தற்பொழுது இந்த வரியை காலாண்டிற்கு

பிரயாணி இடத்திற்கு பன்னிரண்டரை ரூபாய் வீதமோ அல்லது ஆண்டிற்கு, மைலுக்கு, இடத்திற்கு 38 நயா பைசா வீதமோ பஸ் அதிபர்கள் ராஜி (compound) செய்துக் கொள்ள லாம். இந்த முறையில் தினம் 132 மைல்களுக்கு அதிகமாக ஓடும் பஸ்களுக்கு வரி விகிதத்தில் சலுகை கிடைக்கிறது. எனவே, இப்பொழுதுள்ள ' ராஜி ' முறையையும் மாற்றி யமைக்க உத்தேசித்துள்ளோம். இனி 132 மைல்கள் அல்லது 210 கிலோ மீட்டர் வரை ஓடும் பஸ்களுக்கு மாத்திரம் பிரயாணி இடத்திற்கு காலாண்டிற்கு ரூபாய் இருபத்தைந்து கொடுத்து ராஜி செய்து கொள்ளும் உரிமை வழங்கப்படும். மற்ற பஸ்களுக்கு காலாண்டிற்கு பிரயாணி இடத்திற்கு 35 ரூபாய்க்கு மேற்படாமல் கிலோ மீட்டருக்கு ஆண்டிற்கு ஓர் இடத்திற்கு 48 நயா பைசா வீதம் ராஜி செய்து கொள்ளும் உரிமை வழங்கப்படும்.

78. இப்பொழுது மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் சரக்குகள் ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டிகளுக்கு, அதாவது லாரிகள் முதலியனவற்றிற்கு, அவைகளுடைய அனுமதிக்கப்பட்ட நிறை பளுவின் (permitted laden weight) அடிப்படையில் காலாண்டிற்கு 33 ரூபாயிலிருந்து 467 ரூபாய் வரை வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி விதிப்பு முறையில் அதிக கனமுள்ள வண்டிகள் எவ்வளவு அதிகம் வரி செலுத்த வேண்டுமோ அந்த அள விற்குச் செலுத்துவதில்லை. ஆனால், அந்த லாரிகளால்தான் சாலைகளுக்கு அதிகச் சேதம் ஏற்படுகிறது ; அவைகளுக்குத் தான் அதிக இலாபமும் கிடைக்கிறது. எனவே, இப்பொழுது சரக்குகளை ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டிகளுக்குள்ள வரி விகிதங்களை உயர்த்துவதோடு, எடைக்கேற்ப அவற்றை மாற்றி உயர்த்துவதென முடிவு செய்துள்ளோம். புதிய வரி விகிதங்கள் மெட்ரிக் முறையில் நிர்ணயிக்கப்படும். இப்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள வரி உயர்வை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்கலாம்: 110 அந்தர் முதல் 150 அந்தர் வரையுள்ள வண்டிகளுக்கு இப்போதைய வரி விகிதம் காலாண்டிற்கு 360 ரூபாய். இதை அரசாங்கம் இப்பொழுது காலாண்டிற்கு 500 ரூபாயாக உயர்த்த உத் தேசித்துள்ளது. அம்மாதிரியே 150 முதல் 180 அந்தர் வரையுள்ள வண்டிகளுக்கு இப்பொழுது 427 ரூபாய் வரி யாக இருக்கிறது. இது 615 ரூபாயாக உயரும். வண்டி களின் அனுமதிக்கப்பட்ட நிறைப்பளுவை (premitted laden weight) உயர்த்தும் யோசனை தனியாகப் பரிசீலனையி லிருந்து வருகிறது. இப்பொழுதுள்ள வரித் திட்டத்தில் 9 டன்னுக்கு மேல் உள்ள வண்டிகளுக்கு தனி வரி விகிதம்

இல்லை. இனி 9 டன்களுக்கு மேல் உள்ள வண்டிகளுக்கும் தகுந்த வரி விகிதத்தை நிர்ணயிப்பதென முடிவு செய்துள்ளோம்.

79. தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (பிரயாணிகளுக்கும் சரக்குகளுக்கும் வரி விதிப்பது பற்றிய) சட்டத்தின்கீழ் சரக்குகளை ஏற்றிச் செல்ல வசூலிக்கும் கட்டணத்தில் ரூபாய்க்கு 3 நயா பைசா வரியாக வசூலிக்கப்படுகிறது. இந்த வரியையும் வண்டிக்கு மாதத்திற்கு $22\frac{1}{2}$ ரூபாயாக 'ராஜி' (Compound) செய்து கொள்ள உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த வரியை ரூபாய்க்கு 6 நயா பைசாவாக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வரியை வண்டிக்கு மாதத்திற்கு 45 ரூபாயாக 'ராஜி' (Compound) செய்து கொள்ள உரிமை தரப்படும். பிரயாணி பஸ்கள், சரக்குகள் ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டிகள் இவற்றின் வரி விதிப்பைப் பற்றிய மேற்கூறிய இரண்டு சட்டங்களின்கீழ் இப்பொழுது செய்யப்படும் மாற்றங்கள், வரி வீத உயர்வு காரணமாக நடப்பு ஆண்டில் ரூபாய் 2,00 லட்சம் அதிகம் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

மின்சாரத்தின் மீது வரி.

80. அடுத்தபடியாக மின்சாரத்தின் உபயோகத்தின் (Consumption) மீது வரி விதிப்பது என முடிவு செய்திருக்கிறோம். இந்த வரி மின்சாரக் குழுவினர், லைசன்ஸ் தாரர் மூலம் வசூலிக்கப்படும். லைசன்ஸ்தாரர்கள் மின்சாரக் குழுவிட மிருந்து மின்சாரம் வாங்கும்போது வரி விதிக்கப் படமாட்டாது. ஆனால், லைசன்ஸ்தாரர்களிடமிருந்து மற்றவர்கள் மின்சாரம் வாங்கி உபயோகிக்கும் போது, அவர்களிடமிருந்து, இந்த வரி லைசன்ஸ்தாரர் மூலம் வசூலிக்கப்படும். லைசன்ஸ்தாரர்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளும் மின்சாரத்தின் மீதும் வரி வசூலிக்கப்படும். இப்பொழுது மின்சாரம் ''ஹை டென்ஷன்'' (high tension), ''லோ டென்ஷன்'' (low tension) என்று இரண்டு தரத்தில் உபயோகிக்கப்படுகிறது. ''ஹை டென்ஷன்'' மின்சாரத்தை பெரும்பாலும் தொழிற்சாலைகள், லைசன்ஸ்தாரர்கள் முதலியவர்கள் உபயோகிக்கிறார்கள். ''லோ டென்ஷன்'' மின்சாரம் முக்கியமாக விவசாயம், விளக்கு எரித்தல், வீட்டுத் தேவைகள் இந்த காரியங்களுக்காக உபயோகப்படுகிறது. ''ஹை டென்ஷன்'' மின்சாரத்தின் கட்டணம் குறைவு; தொழில்களுக்கு வசூலிக்கப்படும் அதிகக் கட்டணம் யூனிட்டுக்கு 4·7 நயா பைசாதான். ''லோ டென்ஷன்'' மின்சாரக் கட்டணம் இதைவிட அதிகமானது. மிகவும் அதிகக் கட்டணம் 29 நயா பைசா வீதம் வீட்டுக் காரியங்களுக்கு வசூலிக்கப்படுவது. இப்பொழுது ''லோ டென்ஷன்'' மின்சார

உபயோகத்தின்மீது 10 சத விகிதம் வரி விதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. லைசன்ஸ்தாரர்களிடமிருந்து வாங்கி உபயோகிக்கின்ற மின்சாரத்தின் மீதும் இந்த வீதத்தில் வரி வசூலிக்கப்படும். குறைவாகக் கட்டணம் செலுத்துகின்ற ''ஹை டென்ஷன்'' மின்சாரத்தின்மீது பொதுவாக 20 சத வீதம் வரி விதிக்கப்படும். ஆனால், நிர்ணயித்த சில தொழில்களுக்கு மாத்திரம் அவைகளுடைய உற்பத்திச் செலவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாக ஆகாமல் இருக்கும் வண்ணம், குறைந்த அளவில் வரி விதிக்கப்படும். இந்த நோக்கத்துடன் சிமென்ட் தொழிலுக்கு உபயோகப் படும் மின்சாரத்திற்கு 10 சத வீதத்திலும், மின்சார-ரசாயன, மின்சார-உலோகத் தொழில்களுக்கு, அதாவது, காஸ்டிக் சோடா, கால்ஷயம் கார்பைட், அலுமினியம் போன்ற தொழில்களுக்கு உபயோகப்படும் மின்சாரத்தின் மீது 5 சத வீதத்திலும் வரி விதிக்கப்படும். தங்களுடைய உற்பத்தி முறையில் பெரும் அளவிற்கு மின்சாரம் உபயோகிக்கும் தொழில்களைப் பிரகடனப்படுத்தி, அவை களுக்குக் குறைந்த அளவில் வரி விதிப்பதற்கு அரசாங்கம் அதிகாரத்தை சட்ட பூர்வமாகப் பெறுவார்கள். பருத்தி ஆலைத் தொழிலின் உற்பத்திச் செலவில், மின்சாரத் திற்காகச் செலவிடப்படும் தொகை மிகக் குறைவு. எனவே, பருத்தி ஆலைகள் (Textile Mills) உபயோகிக்கும் மின் சாரத்தின்மீது 30 சத வீதம் வரி விதிக்கப்படும். புதிய தொழில் ஸ்தாபனங்களுக்கு, உற்பத்தி தொடங்கியதி லிருந்து மூன்று ஆண்டுகளுக்கு, வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும். சென்னை அனல் மின்சார அமைப்பின் (Thermal system) கீழ் ''ஹை டென்ஷன்'' (High-tension) மின்சாரம் பெறுவோர், மின்சாரத்திற்கான அடிப்படைக் கட்டணத்தின்மேல், நிலக்கரியின் விலையை அனுசரித்து ''எரி பொருள் உபரிக் கட்டணம்'' (Fuel surcharge) என்ற கட்டணத்தையும் கட்டவேண்டியிருப்பது அங்கத்தினர் களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த எரி பொருள் உபரிக் கட்டணம், அடிப்படைக் கட்டணத்தைக் காட்டிலும் அதிக மானது. எனவே, இதை மனதிற்கொண்டு இந்த வரி விதிப்பிலிருந்து இந்த, எரி பொருள் உபரிக் கட்டணத்திற்கு, (fuel surcharge) விலக்களித்து, அடிப்படைக் கட்டணத்தின் மீது மாத்திரம் 5 சத வீதம் வரி விதிப்பது என முடிவு செய்துள்ளோம். சென்னை நகரத்தில் ''லோ டென்ஷன்'' (low tension) மின்சாரத்தை உபயோகிப்பவர் மற்ற இடங் களில் உள்ளவர்களைப் போலவே கட்டணம் செலுத்துகின் றனர். எனவே, அவர்களிடமிருந்து மற்றவர்களைப் போன்று 10 சத வீதம் வரி வசூலிக்கப்படும். மின்சாரத்தின்மீது

விதிக்கப்படும் இந்த வரியின் விளைவுகளைப்பற்றி அரசாங்கம் நன்முக யோசித்து, பல்வேறு தொழில்களின் உற்பத்திச் செலவும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயராது என்ற முடிவிற்கு வந்துள்ளனர். அதுவும் முக்கியமாக மின்சாரத்தை பெருமளவில் உபயோகிக்கும் தொழில்களுக்கு வரி விதிப்பில் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. நாங்கள் போட்டு பார்த்துள்ள கணக்குப்படி, எந்த தொழிலிலும் உற்பத்திச் செலவு 1 சத வீதத்திற்கு மேல் ஏருது ; பெரும்பான்மை யான தொழில்களில் அதைவிட மிகவும் குறைவாகத்தான் இருக்கும். இந்த வரி மூலம் நடப்பாண்டில் 2,15 லட்சம் ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கிருேம்.

ஸ்டாம்புக் கட்டணங்கள்.

81. அடுத்தப்படியாக ஸ்டாம்புகள் சட்டத்தின் ஷெட்யூலில் கண்டிருக்கும் இனங்களில், எந்தெந்த இனங்களின்மீது வரி விதிக்க மாநில அரசாங்கத்திற்கு அதிகாரமிருக்கிறதோ அந்த இனங்களின்மீது ஸ்டாம்பு கட்டணங்களை 50 சத விகிதம் உயர்த்துவதாக உத்தேசித்துள்ளோம். இப்பொழுதுள்ள வரி விகிதங்கள் 1943-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டவை ; அதற்குப் பிறகு மாற்றப்படவேயில்லை. இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரவிருக்கும் ஸ்டாம்பு கட்டண உயர்வை ஸ்தாவர சொத்துக்களின் விற்பனைமீது விதிக்கும் ஸ்டாம்பு கட்டணத்தை உதாரணமாகக் கொண்டு விளக்க முடியும். ஸ்தாவர சொத்துக்களின்மீது இப்பொழுது சொத்தின் மதிப்பில் 3 சத வீதம் ஸ்டாம்பு கட்டணம் விதிக்கப்படுகிறது. இதற்கு மேல் நகராண்மைக் கழகச் சட்டம், பஞ்சாயத்துகள் சட்டம், கார்ப்பரேஷன் சட்டம் இவைகளின் கீழ் 5 சத வீதம் உபரிவரி (Surcharge) விதிக்கப்படுகிறது. அந்தப் பணம் முழுவதும் சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தாபனத்திற்கு தரப்படுகிறது. இப்பொழுது உயர்த்தியுள்ள ஸ்டாம்பு கட்டணத்தையும் சேர்த்து, இனி ஸ்தாவர சொத்துக்களின் விற்பனையின்மீது வசூலிக்கப்படும் ஸ்டாம்பு கட்டணம் 8 சத வீதத்திலிருந்து $9\frac{1}{2}$ சத வீதமாக மாறும் ; அதாவது, $4\frac{1}{2}$ சத வீதம் ஸ்டாம்பு கட்டணம் ; 5 சத வீதம் ஸ்தல ஸ்தாபனத்தின் நன்மைக்கான உபரிவரி (Surcharge). இந்த வரி, சட்டத்தைத் திருத்தியதும் அரசாங்கம் நிர்ணயிக்கின்ற தேதியிலிருந்து அமுலுக்கு வரும். இதன் மூலம் இந்த ஆண்டில் 100 லட்சம் ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நஞ்சை நிலத் தீர்வையும் தண்ணீர்த் தீர்வையும்.

82. அரசாங்கத்தின் அடுத்த வரி விதிப்பு யோசனை நஞ்சை நிலத் தீர்வையையும், தண்ணீர்த் தீர்வையையும் பற்றியதாகும். அரசாங்க நிலவரிக் கணக்குகளில் நஞ்சை என்று பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களின்மீது விதிக்கப்பட்டுள்ள வரி, நில வரி பற்றிய புதிய '' செட்டில்மெண்டு '' ஒன்றும்-

வேண்டாம் என்ற அரசாங்கக் கொள்கை காரணமாக, கடந்த 30 ஆண்டுகளில் மாற்றப்படவில்லை. நில வரி கணக்குகளில் நஞ்சை என்று பதிவு செய்யப்பட்ட நிலங்கள் ''செட்டில்மென்டு'' நடவடிக்கைகளுக்கு முன்பேயிருந்த பாசன ஆதாரங்களின் ஆயக்கட்டின்கீழ் இருக்கின்றன. அந் நிலங்கள், புதிதாக இப்பொழுது உருவாகியிருக்கும் பாசன திட்டங்களின்கீழ் இருக்கும் நிலங்களின் மீது விதிக்கப்படும் வரியைக் காட்டிலும் குறைவான அளவில் வரியைக் கொடுக்கின்றன. விவசாய விளைபொருள்களின் விலை இப்பொழுது வெகுவாக அதிகரித்திருக்கிறது ; பாசன ஆதாரங்களின் பராமரிப்புச் செலவும் அதிகமாகிவிட்டது. நஞ்சை என்று பதிவு செய்யப்பட்ட நிலங்களின் தீர்வை இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று நிலத்திற்கான அடிப்படைத் தீர்வை ; மற்றொன்று தண்ணீர்த் தீர்வை. நஞ்சை நிலத் தீர்வையில் 60 சத வீதம் தண்ணீர்த் தீர்வையெனக் கொள்ளலாம். இப்பொழுது இருக்கும் தண்ணீர்த் தீர்வையை இரட்டிப்பது நமது நோக்கமாதலால் முதல், இரண்டாம் தரப் பாசன ஆதாரங்களின்கீழ் நஞ்சை என்று பதிவு செய்யப்பட்ட நிலங்களின்மீது 60 சத வீதமும், மற்ற பாசன ஆதாரங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட நஞ்சை நிலங்களின்மீது 40 சத வீதமும் உயர்த்துவதாக முடிவு செய்துள்ளோம். நஞ்சை நிலத் தீர்வையின் அதிகரிப்பையொட்டி, புஞ்சை நிலங்களின்மீது விதிக்கப்படும் தண்ணீர்த் தீர்வையையும், முதல், இரண்டாம் தர பாசன ஆதாரங்களின்கீழ் 100 சத வீதமும், மற்ற ஆதாரங்களின்கீழ் 50 சத வீதமும் உயர்த்துவதாக அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இந்த வரி உயர்வு ஜூலை 1-ம் தேதியிலிருந்து தொடங்கும் பசலியிலிருந்து அமுலுக்கு வரும். கீழ் பவானி, அமராவதி, சாத்தனூர் போன்ற பாசன திட்டங்களின்கீழ்—அதாவது முதலாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து பூர்த்தியான பாசன திட்டங்களின் கீழ்—பாசன வசதி பெறும் நிலங்கள் இந்த வரி உயர்வால் பாதிக்கப்படமாட்டா. ஏனெனில், அவற்றிற்கான தண்ணீர்த் தீர்வை சமீப காலத்தில்தான் நிர்ணயிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களின் பளுவை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவு குறைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், இப்பொழுது விதித்துள்ள நஞ்சை நிலவரி உயர்வு, தண்ணீர்த் தீர்வை உயர்வு—இவைகளின் மேல் பஞ்சாயத்து யூனியன்களின் ஸ்தல செஸ், ஸ்தல செஸ் உபரி வரி விதிக்கப்படக் கூடாது என முடிவு செய்துள்ளோம். இவ் வரிவிதிப்பு மூலம் முழு ஆண்டில் 1·3 கோடி ரூபாயும் நடப்பு ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

நகரங்களிலுள்ள நிலங்களின் மீது வரி.

83. சமீப காலத்தில், அரசாங்கத்தின் பல அபிவிருத்தி வேலை திட்டங்களின் காரணமாக நகரங்களில் நில விலைகள் வெகுவாக உயர்ந்திருப்பதும் நிலச் சொந்தக்காரர்களுக்கு பெருமளவில் இலாபம் கிட்டியிருப்பதும், கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். எனவே, இந்த நிலங்களிலிருந்து நம்முடைய அபிவிருத்தி திட்டங்களுக்கு ஓரளவு பணம் கிடைக்கின்ற வகையில், ஒரு பொருத்தமான விசேஷ வரியை விதிப்பது அவசியம். நகரப் புறங்களில் உள்ள நிலத்தின் மீதுள்ள வரி விதிப்புக் கொள்கை சரியான முறையில் அமையவில்லை; நிலவரிக்கும், நில விலைக்கும் ஒன்றும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. சென்னை நகரில் 20 சதுர மைல் பரப்பளவுள்ள நிலப்பகுதியிலிருந்து அரசாங்கத்திற்கு மூன்று லட்சம் ரூபாய்தான் நிலவரியாகக் கிடைக்கிறதென நான் கூறும்போது, நம்முடைய நகரப் புற நிலவரிக் கொள்கையின் குறைபாடுகள் கனம் அங்கத்தினர்களுக்குத் தெளிவாக விளங்கும். மற்ற நகரங்களிலும், முன்பு கிராம நத்தத்தின் பகுதியான நிலங்கள் நிலவரியாக ஒன்றும் கொடுப்பதில்லை. அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருந்து ஜாரி செய்த நிலங்களின்மீது மாத்திரம் ஏக்கருக்கு ஆறேகால் ரூபாய் அல்லது பன்னிரண்டரை ரூபாய் வீதம் நிலவரி விதிக்கப்படுகிறது. எனவே, நகரங்களில் உள்ள நிலங்களின்மீது தகுந்த வரியை விதிப்பதென முடிவு செய்துள்ளோம். இதற்காக நகரங்களில் உள்ள நிலங்களைச் 'சர்வே' செய்து ஒவ்வொரு நகரத்திலுள்ள நிலங்களையும், பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் தகுந்த வரி விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டும். இம்மாதிரி வரி விதிப்பின் பல அம்சங்களையும் ஆராய்ந்து ஒரு தகுந்த சட்டத்தை இந்த சபையின் முன் அரசாங்கம் நாளடைவில் சமர்ப்பிக்கும். நிலங்களின் மார்க்கெட் விலையையொட்டி புதிய வரி அமைய வேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்து. தற்சமயம் இந்த வரி மூலம் அரசாங்கத்திற்கு 25 லட்சம் ரூபாய் கிடைக்கலாம் என்று மாத்திரம் கணக்கில் வரவு வைத்துக்கொண்டிருக்கிறேன்.

பந்தய வரி.

84. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டத்தின்கீழ் (Madras Betting Tax Act, 1935) கீழ் விதிக்கப்படும் வரிகளையும் உயர்த்துவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின்கீழ் இரண்டு வரிகள் விதிக்கப்படுகின்றன. ஒன்று "டோட்டலைஸேட்டர்" (Totalizator tax) வரி; மற்றொன்று குதிரைப் பந்தயம் பிடிப்பவர்களிடம் (book makers) பந்தயம்

கட்டுபவர்கள் (Backers) செலுத்துகின்ற பணத்தின்மீது விதிக்கும் வரி. இப்பொழுது இந்த இரண்டு வரிகளும் சென்னையில் 10 சத வீத அளவிலும் உதகமண்டலத்தில் 5 சத வீத அளவிலும் விதிக்கப்படுகின்றன. இந்த வரி விகிதங்களை இரட்டித்து, அதன்மூலம் 24 லட்சம் ரூபாய் அதிகம் பெற முடிவு செய்துள்ளோம். இப்பொழுதுள்ள சட்டம், வரி வீதம் $12\frac{1}{2}$ சத வீதத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென நிர்ணயித்துள்ளது. இந்த ஷரத்தைத் திருத்துவதற்கான மசோதா சபைமுன் கொண்டுவரப்படும்.

கரும்பின் மீது "செஸ்" வரி உயர்வு.

85. அடுத்தபடியாக 1949-ம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடுச் சட்டத்தின்கீழ் (Madras Sugar Factories Control Act, 1949) குறிப்பிடப்பட்ட பிரதேசங்களுக்குள் வரும் கரும்பின்மீது 'செஸ்' வரி விதிக்கப்படுகிறது. தற்போது, இந்த சட்டத்தின்கீழ் பிரசுரிக்கப்படும் பிரகடனத்தின்கீழ் சர்க்கரை ஆலைகளுக்கு விற்கப்படும் கரும்பின் மேல் டன்னிற்கு 2 ரூபாய் செஸ் விதிக்கப்படுகிறது. இதை இப்பொழுது டன்னிற்கு 5 ரூபாயாக உயர்த்துவதென முடிவு செய்துள்ளோம். இதன் மூலம் 50 லட்சம் ரூபாய் அதிகம் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செஸ் வரி உயர்வு மூலம் ரெவின்யூ கணக்கிற்கு பலன் கிடைக்காது; ஏனென்றால் இந்த துறையிலிருந்துவரும் வரவு பொதுக் கணக்கில் "டெபாஸிட்டு" பிரிவில் முடிவாக பதிவு செய்யப்படும். இருந்தபோதிலும் இந்த அதிக செஸ் வரி விதிப்பின்மூலம் கிடைக்கும் பணம் நம்முடைய வழிவகை நிலைக்கு (Ways and means position) உதவும். தவிர சர்க்கரை ஆலை வளர்ச்சிக்கான வேலைத் திட்டங்களையும் கரும்பு வளரும் பிரதேசங்களில் உள்ள போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் திட்டங்களையும் நிறைவேற்ற உதவும்.

86. இதுகாறும் நான் கூறிய வரி விதிப்பு யோசனைகளில், கரும்பு செஸ் வரி விதிப்பு நீங்கலாக உள்ள மற்ற யோசனைகளை அமுல் செய்ய சட்டப்படி வழிவகை செய்யவேண்டும். அதற்கான சட்ட மசோதாக்களும், சட்ட திருத்த மசோதாக்களும் சபைக்குமுன் கொண்டுவரப்படும். கரும்பு செஸ் வரி விதிப்பு மாத்திரம் சர்க்கார் பிரகடனப்படி அமுலுக்குக் கொண்டு வரக்கூடியது. இந்த வரி விதிப்பு, வரி உயர்வு திட்டங்களின்மூலம் நடப்பு ஆண்டில் 7,15 லட்சம் ரூபாய் அதிக வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் ரெவின்யூ கணக்கில் துண்டு விழும் தொகை ரூ 2,86 லட்சமாக குறையும் ; ஆண்டு இறுதியில் 72 லட்சம் ரூபாய் ரொக்கக் கையிருப்பும் இருக்கும்,

ரெவின்யூ கணக்கில் 2,86 லட்சம் பற்றுக்குறையிருந்தாலும், வருகிற ஆண்டுகளில் நம்முடைய வரிகளிலிருந்து கூடுதலான தொகை கிடைப்பதன்மூலம் நிதி நிலே அபிவிருத்தியுறு மென நம்புகிறேன்.

87, நாம் பெருமளவிற்கு வரி விதிக்க முயற்சித்திருக்கிறோம் என்பது உண்மை ; ஆனால், நம்முடைய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மனத்திற்கொண்டு பார்க்கும்போது இந்த முயற்சி தவிர்க்க முடியாதது. நம்முடைய பிரச்சினைகள் பலப்பல. நம் நாட்டு மக்கள் பல நூற்றாண்டுகள் அடிமைத் தளையில் இருந்தபோது புறக்கணிக்கப்பட்டதன் காரண மாக எழுந்த பிரச்சினைகள் அவை. விஞ்ஞானம், தொழில் நுட்ப அறிவு இவற்றை முழுமையும் பயன்படுத்தி மற்ற நாடுகள் வளர்ந்தோங்கிவர நாம் மாத்திரம் தேங்கிக் கிடந்தோம். பல ஆண்டுகள் செய்த போராட்டங்கள், தியாகங்களின் விளைவாகச் சுதந்திரம் பெற்றோம். கிடைத்த சுதந்திரம் நமக்கு அரிய வாய்ப்பையளித்தது. அதே நேரத் தில் நமக்கு ஒரு பெரும் பணியையும் தந்தது. நம் எதிர் காலத்தை நாமே உருவாக்கிக்கொள்ளும் பேறுதான் அரசியல் சுதந்திரம் நமக்கு அளித்த வாய்ப்பு. மற்றைய நாடுகளுக்கு இணையாகக்கூடிய விரைவில் முன்னேறவேண்டும், இன்றேல் என்றென்றும் பின்தங்கிக் கிடக்க வேண்டியதுதான் என்ற சவாலையும் சுதந்திரம் நமக்கு விடுத்தது. பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் இன்றைய நிலைக்கு வருவதற்கு இரண்டு நூற்றாண்டுகளோ அல்லது அதற்கு மேலோ எடுத்துக்கொள்ள முடிந்தது. காரணம், முன்னேற்றப் பாதை யில் அவர்கள் முதன் முதல் வழிகாட்டிகளாகவிருந்தார்கள். வாழ்க்கையும் அன்று சாவதான நிலையில் இயங்கி வந்தது. ஆனால், நாம் அவர்கள் அடைந்த வளர்ச்சியை குறுகிய காலத்தில் அடைய வேண்டியிருக்கிறது. எனவேதான், அரசாங்கமே ஒரு முக்கிய பங்கு கொண்டு, அடுத்து அடுத்து ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றி, திட்டமிட்ட பொரு ளாதார வளர்ச்சிபெற முடிவு செய்தோம். இம் முயற்சி எளிதானதல்ல. அதுவும் ஜனநாயகக் கட்டுக்கோப்பிற்குள் நம்முடைய திட்டங்கள் அமையவேண்டுமென முடிவு செய்ததால், பல விசேஷ பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டியுள்ளது. ஜனநாயக அமைப்பில், மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்ற கோரிக்கைகள், க்ஷேமநல திட்டங்கள் பெருகவேண்டுமென்ற கோரிக்கைகள், இவற்றைப் புறக்கணித்துவிட்டு பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகப்படுத்த முடியாது. எனவே தான் நம்முடைய திட்டத்தில் உற்பத்தி பெருக்குக்கான

முடிவுரை.

வேலைத் திட்டங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளோமோ, அத்துணை முக்கியத்துவம் கல்வி, மருத்துவம், வீட்டு வசதி போன்ற க்ஷேமநலத் திட்டங்களுக்கும் அளித்துள்ளோம். நம்முடைய திட்டங்கள் உருவத்திலும், மதிப்பிலும் பெரியனவாகத் தோன்றலாம் ; ஆனால், நம்முடைய தேவைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது அவை சிறிய திட்டங்கள்தான். எனவே, இந்த திட்டங்களை முழுவதும், யாதொரு குறைபாடுமின்றி நிறைவேற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் நம்முடைய இலக்குகளையெல்லாம் எய்தினோம் ; சில முக்கியமான துறைகளில் இலக்குகளைக்காட்டிலும் அதிகமாகவே இருந்தன நம்முடைய சாதனைகள். இது எதனால் சாத்தியமாயிற்று ? நம்முடைய நிர்வாக இயந்திரம் திறனுள்ளதாக விருந்தது ; வரி விதிப்பு மூலமும், பொதுக் கடன்கள் மூலமும் போதிய நிதி ஆதாரங்களையும் திரட்டினோம். நம்முடைய நிர்வாக இயந்திரம் முன்பு போலவே திறமையாகச் செயல்படுகிறது. அபிவிருத்தி வேலைகள் ஆக்கம் பெற நமக்கு அதிக நிதி வசதிகள்தான் தேவை. சென்ற சபையில் இருந்த உறுப்பினர்களும், வெளியிலிருந்த பொதுமக்களும் அரசாங்கத்திற்களித்த விவேகமுள்ள ஒத்துழைப்பாலும், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் எல்லாம் அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவை யென்று அவர்கள் கொண்ட பரந்த மனப்பான்மையாலும் நாம் அதிக நிதி வசதிகளைப் பெற முடிந்தது. அதே முறையில், இந்த சபையும் இந்த பட்ஜட் மீது கட்சிசார்பற்ற மேலான மனப்பான்மையுடன் விவாதங்களை நடத்தவேண்டுமென்று பணிவன்புடன் கூறிக் கொண்டு, இந்த பட்ஜட்டை சபை ஏற்கவேண்டும் என்று வேண்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

சென்னை,
30 ஜூன் 1962.

எம். பக்தவத்சலம்,
நிதி அமைச்சர்.